பக்கங்கள்: பதின்நான்கு

மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 10 வெள்ளிக்கிழமை (25.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 240

## இலங்கை அமைச்சர்கள் நினைத்தவாறு இந்தியா வருவதை நிறுத்த வேண்டும்!

### வெளிவிவகார அமைச்சு கண்டிப்பு

புதுடில்லி, ஜூலை 25

இலங்கை அமைச்சர்கள் இந்தியாவிற்கு முன்னறிவித்தலின்றி தாம் நினைத்த நினைத்தவாறு விஜயம் மேற்கொள்வது குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள இந்தியா, எதிர்காலத்தில் இவ்வாறான விஜயங்களின்போது உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சினால் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ கடிதத்திலேயே இந்தக் கண்டிப்பான அறிவுறுத்தல்விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அமைச்சர்கள் பலர் முன்னறிவித்தலின்றி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்வதை சுட்டிக்காட்டியுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு, இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக முடிவிற்குக் கொண்டு வரவேண்டும் என்றும் கடுந்தொனியில் கோரியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சிற்கு முன்னறிவித்தல் வழங்குகின்ற பட்சத்திலேயே அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க முடியுமெனவும் புதுடில்லி தெரிவித்துள்ளது.

இலங்கை அமைச்சர்கள் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ள விரும்பும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு இரவு 9மணி முதல் நடைமுறையில்

யாழ்ப்பாணம், ஜூலை 25

குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை இரவு 9மணி முதல் அதிகாலை 4.30மணிவரை நடைமுறையில் இருக்கும் என பலாலி படைத்தலைமையக ஊடகப்பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

இந்த நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வருவதாகவும் நேர மாற்றம் இருப்பின் முன் கூட்டியே பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-01)

## துணுக்காய், ஒட்டுசுட்டானில் விமானக் குண்டுவீச்சு

கிளிநொச்சி, ஜூலை 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான துணுக்காய் மற்றும் ஒட்டுசுட்டான் பகுதிகள் மீது விமானப் படையின் கிபிர் விமானங்கள் நேற்று

(14 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

கல்விச்சுடர்

8 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான மாதிரி வினாப்பத்திரம்

7 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ வணிகப்புள்ளி விவரவியல்

## வவுனிக்குளமும் தம்வசம் என்று இராணுவம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம் பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து தாங்கள் கைப்பற்றிவிட்டனர் என இராணுவத்தினர் நேற்று அறிவித்தனர்.

மல்லாவிக்கு தென்கிழக்கே மூன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இப்பிரதேசத்தை மன்னார் - வவுனியா முன்னரங்கில் நிலைகொண்டிருந்த 57 ஆவது டிவிஷன் படையினர் நேற்றுக் காலை 10 மணியளவில் கைப்பற்றினர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையிலான 57ஆவது டிவிஷன் படையினர் இந்த முன்னேற்ற நடவடிக்கையை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' மாநாட்டின் பாதுகாப்புக்காக கொழும்பில் மேலும் பல உயர்பாதுகாப்பு வலயங்கள்

கொழும்பு, ஜூலை 25

கொழும்பில் இடம்பெறவுள்ள 'சார்க்' மாநாட்டை முன்னிட்டு, அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் பிரவேசிப்போர் முழுமையான - கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுவர் - என கொழும்பு வடக்குக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல் மெத்திவக்க தெரிவித்துள்ளார்.

'சார்க்' மாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன் 'சார்க்' மாநாடு வேளையில் கொழும்பு நகரில் 12 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர் - என்றும் அவர் குறிப்பிட்டார். ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு சிலாவத்தை கடற்பரப்பில் புலிகளின் மூன்று படகுகள் அழிப்பு

### கடற்படைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 25

முல்லைத்தீவுக்குத் தெற்கே, 2 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சிலாவத்தைக் கடற்பரப்பை நோக்கி நேற்று மாலை 6.30 மணியளவில் வந்த விடுதலைப்புலிகளின் அதிவேகத் தாக்குதல் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டோர் பி.கே.பி.தஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தாக்குதலில் புலிகளின் 3 படகுகள் மூழ்கடிக்கப்பட்டதுடன் மேலும் சில படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிலாவத்தைக் கடற்கரையை நோக்கி நேற்று மாலை விடுதலைப்புலிகளின் 10 படகுகள் வந்ததை கடற்கரையில் ரோந்து நடவடிக்கை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படைமீது புலிகள் நேற்று கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 25

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியை அண் டிய உடும்பன்குளம் பகுதியில் புதிதாக முகாம் நிறுவிக்கொண்டிருந்த அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.40 மணியளவில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட இத்தாக்குதல் சுமார் 40 நிமிட நேரம் நீடித்ததாக புலிகளின் அம்பாறை மாவட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதலை அடுத்து அப்பகுதியில் முகாம் அமைக்கும் பணிகளை இடையிலேயே கைவிட்டுவிட்டு படையினர் தப்பியோடியுள்ளனர். இதன் பின்னர், கஞ்சிக்குடிச்சாறு வனப் பகுதியைநோக்கி சிறப்பு

(14 ஆம் பக்கம் பார்க்க)

ஆடி அமாவாசைக்கு

## கொழும்பு முகத்துவாரத்தில் பிதிர்க்கடன் செய்ய அனுமதிக்கக் கோரி உயர் நீதிமன்றில் நேற்று மனு

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் முதலாம் திகதி ஆடி அமாவாசைத் தினத்தன்று இந்துக்கள் தமது பிதிர் கடன்களை நிறைவேற்றுவதற்காகக் கொழும்பில் கல்யாணி (களனி) கங்கையும் கடலும் சங்கமிக்கும் முகத்துவாரம் சென்று நீராடி, சமயக் கிரியைகளை அங்கு நிறைவு செய்வதற்குத் தடை விதிக்கக் கூடாது என்று பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிடக் கோரி நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு, கிராண்ட்பாஸ், அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ண ஐயர் ரவிசங்கர் குருக்கள் என்பவரின் சார்பிலேயே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

மேற்படி கங்கையும் சமுத்திரமும் சங்கமிக்கும் முகத்துவாரத்தில் மக்களுக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்தே இந்துக்கள் தமது பிதிர்க் கடனை வருடாந்தம் நிறைவேற்றி வருகின்றமை வழமை எனச் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், ஆனால் கடந்த மூன்று வருடங்களாக படையினர் அப்பகுதியில் தடுப்பு நிலைகளை அமைத்து, அப்பகுதியை உயர்பாதுகாப்புப் பிரதேசமாக அறிவித்து, அங்கு இந்துக்கள் தமது கடமைகளை நிறைவேற்றச் செல்வதில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்ட மக்களில் 21,000க்கும் அதிகமானோர் மர நிழல்களிலும், கட்டாந்தரையிலும் தங்கி அவலமுறுகிறார்கள்



யாழ்ப்பாணம் ஜூலை 25

இப்போது நடைபெறும் கொடூர யுத்தத்தின் காரணமாக, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கானமக்கள்வெள்ளாங்குளம், தேவன்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து அவலமுறுகின்றார்கள். அவர்களில் 21,000க்கும் மேற்பட்ட மக்கள் மரநிழல்களிலும், கட்டாந்தரையிலும் தமது அன்றாட வாழ்க்கையை கழிக்கும் பரிதாப நிலை காணப்படுகிறது.

இடம்பெயர்ந்தவர்கள் எல்லோருமே வார்த்தைகளால் விளக்க முடியாத அளவுக்கு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி.வண. கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கவலை தெரிவித்திருக்கிறார்.

அவரது அந்த அறிக்கையில் மேலும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நயினையில் ஆடிப்பூரத் திருவிழா நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 25

நயினாதீவு நாகபூசணியம்மன் ஆலய ஆடிப்பூரத்திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தினமும் காலை விசேட அபிஷேகம், இலட்சார்ச்சனை, திருமுறைப்பாராயணம் ஆகியனவும் மாலை பூசை, இலட்சார்ச்சனை, திமுறைப் பாராயணம், தீபாராதனை ஆகியனவும் இடம்பெறும்.

இறுதி நாளான ஆடிப்பூரத் தினமான அடுத்த மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை பகல் விசேட அபிஷேகம் 108 சங்காபிஷேகம், விசேட திரவிய அபிஷேகம் என்பன நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து ருதுசாந்தி, தீபாராதனை நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார். தொடர்ந்து 'அமுதசுரபி' மண்டபத்தில் அன்னதானம் இடம்பெறும். (1)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் ஞாயிறன்று கார்த்திகைத் திருவிழா

## விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 20 ஆம் திருவிழாவன்று திருக்கார்த்திகை உற்சவம் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

அன்று காலை விசேட அபிஷேகம், பூசைகளைத் தொடர்ந்து ஷண்முகார்ச்சனை இடம்பெறும்.

இன்னிசையுடன் திருப்புகழ் இசைக்க ஷண்முகார்ச்சனை இடம்பெறும். திருமுறைப் பாராயணம், விசேட பஜனை என்பனவும் இடம்பெறும்.

அன்றைய தினம் மாவிளக்கு இடுதலுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாவிளக்குக்குத் தேவையான பொருள்களை ஆலய வாசலில் பெற்றுக் கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அன்று பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், விசேட போக்குவரத்து வசதிகள் தெல்லிப்பழையில் இருந்து செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (1)

# யாழ். பஸ்நிலையத்தில் விபத்து; 10 வயது மாணவன் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். பஸ்நிலையப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற விபத்தில் காயமடைந்த மாணவன் சிகிச்சை பயனளிக்காமல் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

புங்குடுதீவில் இருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறையில் வசித்து வந்த சிவகுலசிங்கம் கேசவன் (வயது10) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

இந்த சம்பவம் தொடர்பாக யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் விசாரணை நடத்தினார்.

ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்தின் நுழைவாயிலுக்கு சமீபமாக காலை 6.30 மணிக்கு சைக்கிலுடன் பிரஸ்தாப மாணவன் நின்றவேளை பஸ்நிலையத்திற்குள் நுழைய வந்த போக்குவரத்து சபையின் பஸ் மாணவனை மோதியுள்ளது.

உடனே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மாணவன் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அன்று இரவு மரணமானார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் அவரது தந்தையிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் பஸ் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தர விட்டார்.

# கொடிகாமத்தில் புதன் மாலை இளைஞன் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 25

கொடிகாமம், வேவில் பகுதியில் இளம் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த இராசதுரை அகிலேஸ்வரன் (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கொடிகாமம் பொலிசார் இந்த மரணம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் அறிக் கை சமர்பித்ததை அடுத்து, நீதிவான் சம் பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

யாழ். சட்டவைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப் படைக்குமாறு நீதிவான் பொலிசாரைப் பணித்தார்.(1-203-207-78-25)

# யுவதி காயம்

கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் யுவதி ஒருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்டவர் அவரை சைக்கிளுடன்தள்ளி வீழ்த்திய தில் யுவதி தலையில் படுகாயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த யோ.சிவகரி (வயது 22) என்பவரே இவ்வாறு காயமடைந்தவர் ஆவார். குறிப்பிட்ட வீதியால் சென்று கொண்டிருந்த யுவதியிடம் இனந்தெரியாத நபர் ஒருவர் சங்கிலியை அபகரிக்க முயன்றபோதே இச் சம்பவம் இடம் பெற்றது. (203-78)

# கதிர்வீச்சு சிகிச்சை மீண்டும் இன்று முதல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் உள்ள கதிர் வீச்சு சிகிச்சை இயந்திரம் பழுதடைந்ததால் தடைப்பட்டிருந்த சிகிச்சை இன்று மீண்டும் ஆரம்பமாகின்றது.

சில தினங்கள் பழுதடைந்திருந்த இந்த இயந்திரம் நேற்று திருத்தப்பட்டுள்ளது என்றும் - இந்த சிகிச்சை பெற ஏற்கனவே திட்டமிட்ட நோயாளிகள் இன்று போதனா வைத்தியசாலை 26ஆம் வாட்டில் சமுகமளிக் கும்படியும் தெரிவிக்கப்பட்டது.

# கல்வியியல் கல்லூரியில் விசேட கல்வி அலகு இன்று திறந்து வைக்கப்படும்

யாழ்ப்பாணம் ஜூலை 25

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் விசேட கல்வி அலகு இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் புதிய கல்வி அலகை இன்று காலை 8.30 மணிக்கு திறந்து வைப்பார்.

(அ)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஜூலை 25

கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கென நாளை சனிக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அலுவலக தாபன விதி மற்றும் நிதிப்பிரமான விடயங்கள் தொடர்பான செயலமர்வு மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 11மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில்நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் - இலங்கை

### விளையாட்டு விஞ்ஞான அலகு

### உடற்கல்வி உயர் டிப்ளோமா கற்கைநெறி 2007/2008

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்தோரிடமிருந்து 3ஆம் வருட உடற் கல்வி டிப்ளோமா கற்கைநெறியை தொடர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) கற்கை நெறிக்கட்டணம்: ரூபா 15,000,00
2) கற்கைநெறிக்கான காலம்: 1 வருடம் (உள்வாரி முழுநேரம்)
3) அரச திணைக்களங்கள், நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள, நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
4) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டுவருட உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்ததற்காக வழங்கப்பட்ட சான்றிதழினதும் (Diploma Certificate) பெறுபேற்றுச்சுருக்கத்தினதும் (Statement) உறுதிப்படுத்தப்பட்ட (சமாதான நீதிவானால்/கிராமசேவையாளரால்) பிரதியை (Certified copy) தவறாது விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் அலுவலக நேரத்தில் யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் ரூபா 100.00 செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை உதவிப்பதிவாளர், பரீட்சைகள் அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.08.2008 இற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதில் பதிவாளர். (சி/553886) 24.07.2008


## கண்ணீர் அஞ்சலி



புங்குடு தீவு புண்ணிய பதியின் மைந்தனும் புகழ் பூத்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், சமூக சேவையாளருமாகிய

### அமரர் நாகநாதி கார்த்திகேசு

(இளைப்பாறிய அதிபர், யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வி)

அன்னாரின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய வித்தியாலய வெள்ளிப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம்.

யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஈஸ்வரி பரமகுரு

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி பரமகுரு காலமானார்.

அன்னார் க.பரமகுரு (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை கல்விக் கோட்டம்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஜெ.தயாநிதி (ஆசிரியர், யா/ வட இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற ப.ஸ்கந்தகுமாரின் அன்புத் தாயாரும், பொ.தயாநிதியின் (கிராம அலுவலர், J/401, J/411) அன்பு மாமியும், ஜெயகுமரனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளிகோயில் வீதி, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.

## இராமலிங்கம் சண்முகநாதன் (சைவம்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சண்முகநாதன் நேற்று (24.07.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான இராமலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் ஏகபுத்திரனும் அமரர் தில்லையம்மாவின் கணவரும் இராமகிருஸ்ணமூர்த்தி, தில்லைநாதன், பாக்கியநாதன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.07.2008) வெள்ளிக்கிழமை மு.ப 11.30மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் சிவன் கோவிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம். (B)

தகவல்: மகன்மார்.

## ஸ்ரீமதி மங்கையர்க்கரசி உமாகாந்தன்



ஸ்ரீமதி மங்கையர்க்கரசி உமாகாந்தன் 21.07.2008 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு பிரம்மஸ்ரீ நீ.பரமேஸ்வரக் குருக்கள் - தாட்ஷாயினி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான முன்னாள் சிரேஷ்டகுரு பிரம்மஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் - சாந்தாதேவி தம்பதியினரின் மூத்த மருமகளும் ஓய்வுபெற்ற தபாலதிபரும் உதயன் பத்திரிகை முன்னாள் உதவி ஆசிரியரும் மட்டக்களப்பு சர்வதேச செஞ்சிலுவை குழு முன்னாள் பரப்புரை உத்தியோகத்தருமான உமாகாந்தனின் மனைவியும் காலஞ்சென்ற மலர்மங்கை, வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்கள், மலரகித சர்மா ( மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், வடமாகாண தலைமை அலுவலகம்) ஆகியோரின் சகோதரியும் ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஸ்ரீதரன், ஓய்வுபெற்ற வயம்ப பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் சதானந்தன், காலஞ்சென்ற தி.கணேஸ்வரன், கௌரிபாலா, திருகோணமலை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் காயத்திரி ஆகியோரின் மைத்துனியும், சிவசாந்தி (லண்டன்), வித்தியாசரனன், காலஞ்சென்ற வேணுகிருஷ்ணா ஆகியோரின் தாயும் தியாகராஜக் குருக்களின் (லண்டன்) மாமியாரும் லட்சுமிகாந்தன், லட்சுமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2008 இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில், வல்வெட்டித்துறை.

தகவல்: பிரம்மஸ்ரீ மனோகரக்குருக்கள்

ஈமெயில் :umakanthan@gmail.com

## திருமதி சண்முகராசா சொர்ணேஸ்வரி (குட்டியக்கா)

நல்லூர், முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா சொர்ணேஸ்வரி (குட்டியக்கா) நேற்று (24.07.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகராசாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பையாபிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் மகேந்திரன், ரவீந்திரன், குணேந்திரன், நந்தினி, நகுலேந்திரன், குமுதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, லோகேஸ்வரி, சற்குணேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2008) வெள்ளிக்கிழமை பி.ப 3.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 400, கோயில் வீதி, நல்லூர். (A)

தகவல்: குணம் (மகன்)


## விற்பனைக்கு

2×2 அளவுடைய குளிர்சாதனப் பெட்டி (டீபிறிசர்) உள்ளூர் தயாரிப்பிலானது. உடன் விற்பனைக்கு உண்டு.


தொடர்பு: கு.சதானந்தன், 5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

## மிக மலிவு விலைகளில்...

Pentium 4

(17" Dell Moniter,Intel Mother Board, Intel Processor 1.6, 256 Ram, CD ROM,40GB Hard Disk, Keyboard & Optical Mouse

17" Dell Moniter 8,500 மட்டுமே



ரூபா 29,900 மட்டுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90சதவீதமான மீனவர்கள் செய்யும் குறிப்பிட்டவகை தொழில்களைச் செய்வதற்குத் தொடர்ந்தும் அனுமதி மறுப்பு

## பட்டினிச்சாவை எதிர்நோக்கி ஆயிரக்கணக்கானோர்

யாழ்ப்பாணம், ஜூலை25

யாழ்.குடாக்கடலில் தொடர்ந்தும் குறிப்பிட்ட சில தொழில்களை மேற்கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது. இதனால் அத்தொழிலையே பொருளாதார ரீதியில் முற்றுமுழுதாக நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினி அவலத்தை எதிர்கொள்வதாகக் கவலை வெளியிடுகின்றனர்.

இந்நிலை தொடர்ந்தால் பல குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ள நேரிடும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.குடாக்கடலில் பாஷையூர், குருநகர், கொழும்புத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் தொழில் செய்து வந்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குடாக்கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் அனுமதி மறுத்தனர். சில வாரங்களின் பின்னர் அனுமதியளித்த போதும் களங்கட்டி, சிறகுவலை போன்ற தொழில்களுக்கு இன்றுவரை அனுமதி வழங்கவில்லை.

மேற்படி பிரதேசங்களின் 90சதவீதமான மீனவர்கள் களங்கட்டி மற்றும் சிறகுவலைத் தொழிலையே செய்துவந்தனர். இதனால் அந்த மீனவர்கள் அனைவருமே பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில மீனவர்கள் வறுமையின் கோரம் தாங்காமல் தமக்குப் பழக்கம் இல்லாத- இதுவரை தாம் மேற்கொள்ளாத மீன்பிடி நடைமுறைகளைப் பின்பற்றிய போதும் அதில் மிகமிகக் குறைந்தளவு உற்பத்தியையே பெறமுடிகின்றது எனவும்-

இந்த வருமானம் தமது ஒரு நேர உணவிற்கே போதியதாக இல்லை எனவும் கண்ணீரு டன் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்படும் எனத் தெரிவித்து பல வாரங்கள் கடந்துவிட்டபோதும் இன்றுவரை நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

நிவாரண உதவிகள் மட்டும் தமது வாழ்விற்கு வழி ஏற்படுத்தாது என்றும்-

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆயிரக்கணக்கான குடும்பங்களை பட்டினிச்சாவிலிருந்து மீட்க உடனடியாக உரிய தீர்வைப் பெற்றுத்தர- தொழிலை மீளநடத்துவதற்கு- நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

(202)

# சாவகச்சேரியில் சுகாதாரமற்ற முறையில் விற்கப்படும் உணவுப் பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை25

சாவகச்சேரி நகரப் பகுதியில் சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நிலையில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களை அழிக்கும் நடவடிக்கைகள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பொதுச் சந்தை, விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வெட்டப்பட்ட நிலையில் சந்தைக்கு கொண்டு வரப்படும் பலாப்பழங்கள் உட்பட உணவுப் பொருள்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சுகாதாரமற்றவையைப் பறிமுதல்செய்து அழிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுத்துண்டு இல்லாமல் வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஜூஸ் பைக்கற்றுக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டதாக சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

சந்தையில் வெங்காயம், மரக்கறி, மீன் வகைகள் ஆகியவற்றை விரிப்புகளின் மேல் வைத்து விற்குமாறும் வெறும் நிலத்தில் வைத்து விற்கப்படும் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுமெனவும் சந்தை வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

(202-207)

## சமூக செயற்பாட்டு மையம்

# பருத்தித்துறைப் பிரிவிலுள்ள பூவன்கரையை மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்துள்ளது

நவாலி, ஜூலை25

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினர் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பூவன்கரைக் கிராமத்தை மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்துள்ளனர்.

அதையடுத்து மேற்படி அமைப்பினர் இக்கிராமத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இந்தத் திட்டங்களின் கீழ் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் வீட்டுத்தோட்டத்திற்கு சேதனப் பசளைகள், 8 பயனாளிகளுக்கு பசுமாடுகள், இளைஞர், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகர்தராஜ், நிறுவன உதவித்திட்ட அலுவலர் தர்சினி மகேந்திரன், கால்நடை வைத்தியர் எஸ்.வசீகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(202-100)




# யாழ்ப்பாணத்தில் அரிசியின் விலை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது

## கட்டுப்படுத்துமாறு நுகர்வோர் கோரிக்கை

குருநகர்,ஜூலை25

யாழ்.மாவட்டத்தில் அரிசியின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

யாழ்.நகரில் உள்ள வியாபார நிலையங்களில் 10கிலோ நாட்டரிசி ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது ஆயிரத்து 200 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

ஏனைய அரிசி வகைகளும் அதிகவிலைக்கே தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை-

சீனி, சவர்க்காரம் ஆகியவையும் தற்போது விலை அதிகரித்தே விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இந்தவிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

(202-51)

# பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

வடமராட்சி, ஜூலை25

பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயலாளராக எஸ்.சந்திரயோகன் நியமிக்கப்பட்டு பெறுப்பேற்றுள்ளார்.

சபையின் செயலாளராகப் பணியாற்றிய எஸ்.பசுபதி சேவையிலிருந்து இளைப்பாறியதையடுத்து சபையில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்ற சந்திரயோகன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(202-236)

# வலிகாமம் மேற்கில் விழிப்புணர்வுக் கூட்டங்கள்

தொல்புரம்,ஜூலை25

திருடர்கள் குறித்து விழிப்புணர்வுடன் பொதுமக்களை செயற்படுமாறு அறிவுறுத்தும் கூட்டங்கள் வலிகாமம் மேற்கில் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தையிலும் சங்கானைச் சந்தையிலும் கூட்டங்கள் நடைபெற்றன.

மக்கள் இரவு வேளைகளில் எக்காரணம் கொண்டும் கதவுகளைத் திறக்கக் கூடாது.

திருடர்களின் நடமாட்டம் அறிந்தால் வீதிகளில் ரோந்தில் ஈடுபட்டிருக்கும் படையினருடனோ அல்லது முகாம்களில் உள்ளவர்களுடனோ தொடர்பு கொண்டு அறிவித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டது.

(202-119)

# நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை25

வடபுலத்து தொழிற்சங்கப் போராளி தோழர் ஜெயம் தர்மகுலசிங்கத்தின் 59 ஆவது நினைவுதின நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அகவிழி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.சர்வதேச மார்க்சியக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சொ.சிவபாலன் நினைவுரை நிகழ்த்துவார்.

(202)

# வலி.வடக்குப் பிரதேச உள்ளூராட்சி நிகழ்வுகள்

சங்கானை, ஜூலை25

வலி.வடக்குப் பிரதேச சபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் திறமையாகச் செயற்படுபவற்றைத் தெரிவு செய்து கௌரவித்தல், 25 வருடங்கள் சேவையாற்றிய முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவித்தல், சனசமூக நிலையங்கள் ஊடாக சிரமதானம், மரநடுகை ஆகிய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செய்யவுள்ளதாகச் சபைச் செயலாளர் இ.அருணகிரி தெரிவித்தார்.

(202-29)

# ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியாவின் அபிவிருத்திக்கு நிதி

நவாலி, ஜூலை25

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கென 18 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வித்தியாலய அதிபர் ந.சிவகடாட்சம் தெரிவித்தார்.

(202-100)

# குடாநாட்டில் உள்ளிக்குத் தட்டுப்பாடு

நவாலி, ஜூலை25

குடாநாட்டில் உள்ளிக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பல வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ உள்ளி 550ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை கோழி முட்டையின் விலையும் திடீரென அதிகரித்துள்ளது. 15 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 19 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(202-100)

# ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை25

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவல்கட்டு அந்திக்குளி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.


அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'அறநெறிக்கல்வியின் அவசியம்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசிதரன் கருத்துரை நிகழ்த்துவார்.

(202)



யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் யாழ்.வலயப் பாடசாலை மாணவர்களின் அழகியல் கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுவதை [illegible] பட்டிருந்த ஆக்கங்களில் ஒரு சிலவற்றை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: நம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை26

திருநெல்வேலி நீலாய தாக்ஷி சமேத காயாரோகண சுவாமி ஆலய அம்பிகை பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை26

சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு முருகமூர்த்தி ஆலயபெருந் திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (203-207)

* * *

கரவெட்டி, ஜூலை26

வல்வெட்டித்துறை வாலாம்பிகா சமேத வைத் தீஸ்வரன் ஆலய தேவிபெருந்திரு விழா நாளை சனிக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி ஆடிப் பூரத் தினத் தன்று ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் தீர்த்தம் இடம்பெறும். (203-70)


## உடனடி வேலைக்கு ஆள் தேவை

அமெரிக்கன் இலங்கை மிசன் அச்சகத்திற்கு கீழ்க்காணும் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை.

1. இயந்திர இயக்குநர் (மெசின் ஓட்டுனர் - Minder)
2. Type Setter (Graphic வேலை செய்யக் கூடியவர்கள்)
3. புத்தகம் கட்டுபவர் - (பைண்டர் - Binder) ஆண்கள்

முகவரி: 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 9102 (76622)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

"ஈழத்து இராமேஸ்வரம்"
புங்குடுதீவு - பாணாவிடைச்சிவன் தேவஸ்தானம்
எமது ஆலய புனரமைப்புக்கு நிதியுதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளருமான

**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு ஊரதீவு வாழ்மக்களும் ஆலய பரிபாலன சபையினரும் நன்றி கூறுவதுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ஊரதீவு வாழ் மக்களும், ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினரும்.

(76617)

## 45ஆம் நாள் அஞ்சலி

பிறப்பு 26 . 08 . 1927



இறப்பு 10 . 06 . 2008

**தம்பு குணமணி** *(அங்கா)*


*பாசமுள்ள அங்கா, தாத்தா*
*பாசத்தை சொரிந்தீர்கள் - தள்ளாத நிலையிலும்*
*தொண்டுகள் பல புரிந்தீர்கள்*
*கண்மூடி விழிக்கும் முன்னே*
*காலன் உங்களைக் கவர்ந்ததேனோ?*
*காலமெல்லாம் உங்களை மறக்க முடியுமா?*

உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்...
**அன்பு உள்ளங்கள்.**

*இல: 15, இராமநாதன் வீதி,*
*நாயன்மார்கட்டு, நல்லூர்.*
*யாழ்ப்பாணம்.*

## முகவரி தொலைந்து மூன்றாம் ஆண்டு...!

தாயவன் கையில் 28 . 11 . 1980



காலனவன் கையில் 25 . 07 . 2005

**அமரர் சிவசுப்பிரமணியம் மயூரன்**

(1999ஆம்ஆண்டு உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவன், யா/இந்துக் கல்லூரி)

திதி: 28.07.2008

**பாசத்தை எமக்களித்து**
**பாதியில் பிரிந்தாயே - மயூரா**
**பதறியே துடிக்கின்றோம்**
**உன்னைத் தினம் எண்ணியே!**
**பாரினில் வந்திடுவாயா?**

*149, 3/1, காலிவீதி,*
*தெஹிவளை.*
*0776953779* (சி/553886)

உன் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## மல்லாவி அரச மருத்துவ மனையை அக்கராயனுக்கு மாற்ற நடவடிக்கை

கொழும்பு, ஜூலை25

மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய்ப் பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந் துள்ளதன் காரணமாக மல்லாவி அரச மருத்துவ மனையை அக்கராயனுக்கு மாற்றுவதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மல்லாவியில் இருந்து இடம்பெயந்த ஆயிரக்கணக்கான மக்கள் அக்கராயனிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

உலக உணவுத் திட்டமும் தனது பண்டக சாலையை மல்லாவியில் இருந்து கிளிநொச்சிக்கு மாற்றியுள்ளது. (203)

## உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வு இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை25

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கணக்கீட்டுப் பாடச்செய லமர்வு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செயலமர்வு விக்னேஸ்வராக் கல்லூரியில் குறிப்பிட்ட நேரத்தில் இடம் பெறும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித் துள்ளார். (203)

## சாவகச்சேரியில் மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை25

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபை தனது எல்லைக் குட்பட்ட சனசமூக நிலையங்களின்கீழ் இயங்கும் விளையாட்டுக் கழகங்களுக் கிடையே மென்பந்து சுற்றுப் போட்டியை நாளை சனிக்கிழமை மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளது.

போட்டிகளின் கலந்து கொள்ள விரும்பும் சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக் குட் பட்ட கழகங்கள் சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தெரிவித்துள்ளார். (1-131)

## தவறிவிட்டது

அலுவலகத்துக்குச் சொந்தமான இரண்டு சிறிய இரும்புத் திறப்புக்கள் யாழ்.நகரப் பகுதியில் 19.07.2008இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஒப்படைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.


- **History** (English Medium)
- **English Literature**

G.C.E. O/L & G.C.E. A/L

Classes Commence on 30.07.2008

Contact:
Director,
**JAFFNA COLLEGE UNDERGRATUATE DEPT**
464, Hospital Road, Jaffna.

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு, புலவனார் வீதியில் இரண்டு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0774376594 (76618)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**
(Jaffna University)

1st in Com., B.Com. (Part I)
B.Com. (Part II), B.Com. (final)

பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| கணக்கீடு | : முகுந்தன், சிவகுமார் |
| முகாமைத்துவம் | : உமாகாந் |
| பொருளியல் | : இராஜேஸ்வரன் |
| கணிதம் | : அம்பிகைபாகன் |
| ஆங்கிலம் | : நிசாந்தன் |

மேலும் விவரங்களுக்கு:

**Jaffna College Undergraduate Dept**
464, Hospital Road,
(Near commercial Bank)
Jaffna.

(சி/553885)


## மரண அறிவித்தல்கள்

### அமரர் அம்பலவாணர் நடராசா



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அமரர் அம்பலவாணர் நடராசா நேற்று (24.07.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அம்பலவாணர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் வெற்றிவேலு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சற்குணத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, பரமேஸ்வரி மற்றும் மாணிக்கவாசகர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராசரெத்தினம், தங்கம்மா மற்றும் செல்லத்துரை (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் சாரதாதேவி (பிரான்ஸ்), கண்ணதாசன் (பிரான்ஸ்), சந்திராதேவி (புங்குடுதீவு), வரதராசன் (சுவிஸ்), யோகலெட்சுமி (ஜேர்மனி), தமிழினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனபாலசுந்தரம் (பிரான்ஸ்), கௌரிமாலா (பிரான்ஸ்), தனஞ்செயன் (புங்குடுதீவு), சயந்தினி (சுவிஸ்), ஆனந்தகுமார் (ஜேர்மனி), குகனேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் நதீரா, லக்மன், நிதுஷா, நிதுஷாசியா, சங்கீதா, வசீகரன், கயந்தன், கயந்தினி, ஆதவன், மிதூசன், கஸ்தூரி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப.3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முனைப் புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (சி/553883)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி கந்தையா நாகரத்தினம் (செல்லம்மா)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகரத்தினம் நேற்று (24.07.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
க.கிருஷ்ணமூர்த்தி,
க.புவனேந்திரராசா *(ஐயா)*,
க.தேவராசா *(அம்மான்)*,
*(மகன்மார்)*

*காளி கோயிலடி,*
*சங்கானை.* (76614)

### திருமதி பாலச்சந்திரன் பத்மலோஜினி



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலச்சந்திரன் பத்மலோஜினி 22.07.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் யோகநாதன்- பற்றிமாஜெசிந்த தம்பதியரின் அன்பு மகளும் இராசையா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் பாலச்சந்திரனின் அன்பு மனைவியும் பானுசா, பானுசன், பாமினி ஆகியோரின் தாயும் கணநாதன் (கனடா), நவநாதன் (ஜேர்மனி), தவநேசன் (கனடா), கமலநாதன் (ஜேர்மனி), உமாபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேஸ்வரி, செல்வி (கனடா), மணி (பிரான்ஸ்), கிளி (பிரான்ஸ்), ராசன் (ஜேர்மனி), பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனியும் கிரி (லண்டன்), கெங்கா, ராதா (பிரான்ஸ்), ரூபன் (இந்தியா), ராதிகா, தருசன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 27.07.2008 ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொறள்ள பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

*இல.: 56/15, அவ்லல் சாவியா வீதி,*
*கிராண்பாஸ்,*
*கொழும்பு - 14*
*0115872276*

தகவல்:
ராதிகா குடும்பத்தினர்
(சுதீசன் வெல்டிங்வேக்சோப்)
கொய்யாத்தோட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோனகதெரு இக்ரஃ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. முன்பள்ளி சிறார்களின் விளையாட்டின் சில காட்சிகள் இவை (1-111)

# எட்வின் அரைச்சதம் போட, கபிலன் 7 விக்கெட்டுக்களைச் சாய்க்க

# ஸ்ரான்லியை 296 ஓட்டங்களால் வென்றது சென்.ஜோன்ஸ்



எட்வின் ஜோய்



கபிலன்

வலி.வடக்கு, ஜூலை 25

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திவரும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 296 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

எட்வின் ஜோய் 58, சஞ்சயன் 47, ரஜிந்தன் 38, திசான் ஆட்டமிழக்காது 36, துஸ்யந்தன் 37, அமிதயன் 27, பினசன்னா 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

கஜீவன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 59 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் மதன் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 46 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் மற்றும் கலைச் செல்வன் 10 ஓவர்கள் பந்து வீசி 62 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கியோசன் 10 ஓவர்கள் பந்துவீசி 72 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

மிகவும் கூடிய இலக்கான 352 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 17.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

கபிலன் 07 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 07 விக்கெட்டுக்களும் திசான் 03 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் சஜன் 05 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஹரிகரன் 04 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 10ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

களை கட்டுகிறது பாடசாலைகளின் கிரிக்கெட் கொண்டாட்டம்

துடியன்

### மெய்வன்மைப் போட்டி

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் 2008 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப.1.30 மணிக்கு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இளைப்பாறிய கிராமசேவை உத்தியோகத்தர் த.தங்கராசாவின் தலைமையில் இடம்பெறவுள்ளன.

# எட்டு விக்கெட்டுக்களால் சென்றலை வென்றது யூனியன்



அனுசியன்

இலங்கைபாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணபாடசாலைகள்கிரிக்கெட் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே 15 வயதுப்பிரிவினருக்கு நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

உதுசனன் மூன்று நான்குகள் உட்பட 19, தனோஜன் 12 ஓட்டங்ளைப் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 38 ஓட்டங்களும் பெறப்பட்டன.

இராகுலன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 27 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ஜோய் கிறேசியன் 08 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும், சுலோஜன் 05 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பானுசன் 04 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சுகீசன் 06 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 04 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்

104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடக்களமிறங்கிய யூனியன் கல்லூரி 33.4 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. அனுசியன் ஒரு ஆறு, ஏழு நான்குகள் உட்பட ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும், இராகுலன் ஆட்டமிழக்காது இரண்டு நான்குகளுடன் 19 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

தனோஜன் 07 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்ளைக் கைப்பற்றினார். (1-86)

# வடமராட்சியில் விறுவிறுப்பான உதைபந்தாட்டம்; டயமன்ஸை வென்று கேடயம் சுவீகரித்தது சிவானந்தா

கரவெட்டி, ஜூன் 25

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கும் வை.எம்.சீ.ஏ. நிறுவனமும் இணைந்து நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் கேடயம் சுவீகரித்தது.

வதிரிடயமன்ஸ் வி.கவும், கொற்றாவத்தை சிவானந்தா வி.கவும் இறுதி ஆட்டத்தில் மோதின.

இரு அணிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விறுவிறுப்பாக மோதிக்கொண்டனர். ஆட்ட நேர இறுதியில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை.



சம்பியனுக்கான வெற்றிக்கேடயம் அருட்தந்தை டேவிட் அழகராஜாவால் வெற்றியீட்டிய சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப் படுகின்றது. வெற்றிக்கிண்ணத்தை முதன்மைவீரன் சந்திரலிங்கம் அருண் பெற்றுக் கொள்கின்றார். சிவானந்த வீரர்கள் அதன் முன்னாள் தலைவர் பி.சிவபாதசுந்தரத்துடன் வெற்றி களிப்புடன் காணப்படுகின்றனர் (படங்கள்: சுந்தா)

வெற்றி தோல்வியை முடிவுசெய்வதற்காக தண்டனை உதைப்பு வழங்கப்பட்டது.

இதில்சிவானந்தா 4:2 என்ற கோல்கணக்கில் வென்றுசம்பியன்கேடயத்தைகைப்பற்றியது.

சிறந்த வீரனாக சிவானந்தா வி.க.வீரன் சந்திரலிங்கம் அருண் தெரிவுசெய்யப்பட்டார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அருட் தந்தை டேவிட் அழகராசா கேடயங்களை வழங்கினார். (1-70)

# கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆவரங்காலும் அச்சுவேலியும் மோதுகின்றன

சங்கானை, ஜூலை 25

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் சுற்றுப் போட்டியில் ஆண்கள் 'ஏ' பிரிவில் இறுதியாட்டத்துக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கவும் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.கவும் தெரிவாகியுள்ளன.

இந்த இறுதியாட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிறபகல் புத்தூர் கலைமதி வி.க.மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் நடந்த இச்சுற்றுப்போட்டியில் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய வி.கழகமும் அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.கவும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பான இப்போட்டி பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது. இதில் அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.கழகம் 20:25, 25:21, 25:22, 16:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 3:1 என்ற செற்களில் வென்றது.

இரண்டாவதாக நடைபெற்ற அரை இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞன் வி.கவினை காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர்கொண்டது. இப்போட்டியும் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞன் வி.கழகம் 23:25, 25:22, 26:24, 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 3:1 என்ற செற்களில் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம எழுச்சித் திட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம், ஜூலை25

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கற்குளம் வடிகால், வாய்க்கால்கள் புனரமைப்பு, ஆறுகால்மடம் அறிவொறி சனசமூக நிலைய திருத்தம் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(203-302)

தென்னிந்தியத் திருச்சபை "யாழ்.ஆதீனம்"
கலை பண்பாட்டு தொடர்பு நிலையம் வெளியிடும்
**வண.T.S.யோசுவா** எழுதிய
"ஒரு நதியின் ஊற்று" நூல் வெளியீடு

காலம்: நாளை (26.07.2008) சனிக்கிழமை
நேரம்: பி.ப.2.30 மணி
இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி "ஒட்லி மண்டபம்"
தலைவர்: அதிவண. கலாநிதி D.S.தியாகராஜா
(பேராயர், தென்னிந்தியத் திருச்சபை, யாழ்.ஆதீனம்)
இந்நிகழ்வுக்கு உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வண.I.இராஜ்குமார்**
ஆதீன செயலாளர், வட்டுக்கோட்டை.
(76608)

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.08.2008 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 50 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது. பால் உற்பத்தியாளர்களின் உற்பத்திச்செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/553843)

## மரண அறிவித்தல்

### தம்பு கிருஷ்ணபிள்ளை (கிட்டினர்)

*(தலைவர், விவசாய சம்மேளனம்)*



அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கிருஷ்ணபிள்ளை (23.07.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு-நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் யோகம்மாவின் (மலர்) அன்புக் கணவரும் ஜெயக்குமார் (ஜேர்மனி), சறோஜினிதேவி (லண்டன்), விஜேகுமார் (கனடா), கேமா (கனடா), சிவராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராணி (ஜேர்மனி), கேதாரநாதன் (லண்டன்), சந்திரவேணி (கனடா), உருத்திரகுமார் (கனடா), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் சுதர்சன், ரஞ்ஜினி, சுயந்தன், செந்தூரன், செலானி, வினோயன், வினோயி, அனுயன், லக்ஸி, சவுனியா, யனிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராமலிங்கத்தின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.07.2008) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி,
பத்தமேனி.
(சி/553875)

தகவல்:
யோகம்மா
(மலர்- மனைவி).

## முதலாவது பிறந்தின வாழ்த்து



பிரபாகரன் - சரண்யா
தம்பதியினரின் புதல்வன்
ஔஷதன்
Aowshathan
இன்று (25.07.2008)
முதலாவது பிறந்த
தினத்தைக் கொண்டாடும்
ஔஷதன் பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்
பெற்றோரும் உற்றோரும்
ஜோதிபுரம், இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.

## சிக்கன மின்குமிழ்

60%-80% வரையான மின்சார சிக்கனத்தை ஏற்படுத்தும் உத்தரவாதத்துடன் கூடிய மின்குமிழ்களை (Energy Saving Bulbs) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Digital Electronics
205/7, Raja Theatre Complex
Kasthuriar Road, Jaffna.

## காணி வீடு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கில், மானிப்பாய் வீதியின் வடக்குப் பக்கமாக வீதி ஓரமாக மகிந்தினி களஞ்சியத்துக்கு முன்பாக அமைந்துள்ள 'மந்தர ஓடை' என்னும் நி.ப.3 விஸ்தீரண ஆதனமும் கல்வீடும் விற்பனைக்குண்டு. வே.விசுவநாதர், (சுமித்திரன் ஸ்ரோஸ் உரிமையாளர்), கைதடி கிழக்கு, கைதடி. தொ.பே: 060 221 3134

## சேவை நலன் பாராட்டு



### திரு.கந்தசாமி சந்திரசேகரம்

*கணக்காளர் சேவை - வகுப்பு - I, தரம் -I*
*கணக்காளர், வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி*

நிறைகுடம் தளம்பாது என்பதை நிதர்சனமாக்கி நேரான பாதையில் நின்று நீதியாகவும் நிதானமாகவும் அனைவருக்கும் நிறைவான சேவையை வழங்கினீர்கள்.

நாற்பது வருட சேவையை நிறைவு செய்து நிறைவான உள்ளத்துடன் ஓய்வுபெறும் இந்நாளில் தங்கள் சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துத் தெரிவிக்கும் அன்புள்ளங்களுடன் ஓர் உள்ளமாக இணையும்

திரு.அரியரத்தினம் (முன்னாள் அதிபர்),
யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை ம.வி,
யா/ சிதம்பரக் கல்லூரி.
(சி/553853)

## நெஞ்சம் கனத்த நினைவின் எட்டாம் ஆண்டு நினைவலைகள்

அகம் மகிழ
31.07.1945



அகம் நெகிழ
25.07.2000

### அமரர் கிருபைரட்ணம் ஜெயசீலன்

(முன்னாள் கிராம அலுவலர், துன்னாலை கிழக்கு- J/371)

அன்பு செய்தீர் அரவணைத்தீர்
இன்பமாய் நாம் வாழ நீர் உழைத்தீர்
கல்வி தந்தீர், கலைகள் சொன்னீர்
கடின உழைப்புக்கு வழிகள் சொன்னீர் - நடுவழியில்
காலன் உம்மைக் கொண்டு சென்றான்
உங்கள் ஆத்மா எங்கள் நினைவுகளில்
என்றும் மரணிக்காது.

தகவல்: ஜெ.பி.சுரேஸ்குமார்,
அனிஞ்சலடி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

பிரிவுத்துயருடன்:
குடும்பத்தினர்.
(76432)

## நீங்காத நினைவலைகள்

12 ஆம் ஆண்டு



25 ஆம் ஆண்டு



அமரர்
சி.நா.முத்தையா

திருமதி
இலக்குமி அம்மா (சோதிமணி) முத்தையா

| | | |
|---|---|---|
| 04.08.1921 | தோற்றம் | 16.07.1931 |
| 12.04.1996 | மறைவு | 02.08.1983 |

திதி: அட்டமி

இன்றல்ல நேற்றல்ல இருபத்தைந்தாண்டுகள் சென்றிட்டு உமைப்பிரிந்து
ஆடிக்கலவரத்தின் அடுத்துவந்த அந்தநாள்கள் அன்பை அரவணைப்பை
அவனியை விட்டு அகற்றிவிட அஸ்தியை பார்த்து அழுதோம் அம்மா என்று...

யாழ்ப்பாண இடப்பெயர்வு அதைத்தொடர்ந்து கொழும்பு சென்று எம் உறவுகளுடன்
உரையாடி இருந்தவேளையிலே எம் தந்தை, கணக்குப்பிள்ளை, அமுதசுரபி அம்பாள்
தொண்டர் குடும்பத்தின் குலவிளக்கு அணைந்துவிட ஏங்கித்தவித்தோம் ஐயா என்று...

நன்றென்று உம் மக்கள் நாற்திசையும் சென்றின்று இல்லறத்தில் ஊன்றி இன்புற்று
மென்மேலும் மேன்மையுற முன்னறி தெய்வம் உங்கள் முகங்களை வேண்டுமென்று

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (76566)

உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### வலி.மேற்கில் நடமாடும் ஆயுள்வேத சேவை

யாழ்ப்பாணம், ஜூலை25

வலி.மேற்கு பல்லசுட்டி, துணைவி ஆகிய கிராமங்களில் இன்று வெள்ளிக்கிழமை நடமாடும் ஆயுள் வேதவைத்தியம் சேவை இடம் பெறவுள்ளது.

அத்துடன் சித்தன்கேணி மாதர் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் சுயதொழில் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இச்செயற்பாடுகள் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளன. (203)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
17.09.1924

மறைவு
25.06.2008

### அமரர் சுப்பர் கணபதிப்பிள்ளை

உள்ளத்தால் உனையெண்ணித் துடிக்கின்றோம்.

கடந்த 25.06.2008 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.07.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அந்தநிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி. (76579)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

# புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

திரு.எஸ்.கணேசலிங்கம் - திருமலை.

சுடடெண்: வினாத்தாள்.I 45 நிமிடங்கள்

புள்ளிகள்

| | |
|---|---|
| பக்கம் 1 | |
| பக்கம் 2 | |
| பக்கம் 3 | |
| பக்கம் 4 | |
| மொத்தம் | |

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றின் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

(XIX) படத்திற்குப் பொருத்தமான சரியான விடையைத் தெரிவு செய்க.



01. 1. ஒளித்தொகுப்பு – மழை – கனனி
 2. வித்து முளைத்தல் - கார் - கடிகாரம்
 3. தாவரம் - கணிப்பான் - மின்சாரம்



02. 1. கண்டி – சென்தோமஸ் வித்தியாலயம் - தொழில் அமைச்சர்
 2. கொழும்பு – வைக்கிளிப் வித்தியாலயம் - நூலாசிரியர்.
 3. வெயாங்கொட – களனி வித்தியாலயம் - சிங்கள அகராதி

(XIX) பின்வரும் பாடலை வாசித்து 3ம் 4ம் 5ம் வினாக்களுக்கு விடை எழுதுக.

நல்லறிவான்ற தலைமுறை தோன்றிட
நம்மனைவர்க்கும் அரசு வழங்கிடும் - ஏடிதனை
உடன் பிறவிகளுக்காய் உணர்வுடன் பேணி
அனைவர்க்கும் வழங்குதல் கடன் எனக் கொள்வீர்

03. "நம்மனைவர்" என்பது.
 1. ஆசிரியர்களை 2. பெற்றோரை 3. மாணவரை
04. "உம் கடன்" என்பது
 1. உங்கள் ஒழுக்கம் 2. உங்கள் விருப்பம் 3. உங்கள் பணி
05. இங்கு ஏடு எனக் குறிப்பிடுவது.
 1. சுவடிகளை 2. நாவலை 3. பாட நூலை

(XIX) பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.


06. எவ்விடயமும் உரிய வேளையில் செய்யாவிடின் அக்காரியம் முடிவுறத் தாமதமாகும்.
 1. எறும்பூரத் தாமதமாகும் 3. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
 2. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
07. நன்மை செய்தவன் உயர்வடைவான் தீமை செய்தவன் இடர்படுவான்
 1. எலிவளையானாலும் தனிவளை வேண்டும். 2. அடாது செய்தவன்படாது படுவான்
 3. தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்
08. இன்று பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தந்தது மிகக் குறைவாகக் காணப்பட்டது அதற்கு காரணமாகக் கொள்ளக் கூடியது
 1. மாணவர்கள் பலர் வீட்டு வேலை செய்யாமை 2. இயற்கை அனர்த்தம் ஏற்பட்டமை
 3. பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அக்கறையின்மை
09. மரக்கட்டை தண்ணீரில் மிதப்பதற்குக் காரணம்
 1. அதனுள் காற்று உள்ளமை 3. அது நீரை விட பாரமற்றது
 2. அது கன அளவு கூடியது
10. அரசாங்கம் வரிப்பணம் அறிவடுவது
 1. உல்லாச பயணிகளுக்காக
 2. நாட்டு நிர்வாக அபிவிருத்தி செலவுக்காக
 3. வெளிநாட்டிற்குக் கடன் கொடுக்க

(XIX) கீழே உள்ள சொற்கள் ஒவ்வொன்றிலும் தனித்தனி ஒரு எழுத்தை எடுத்துவிட்டு இரண்டு சொற்களை உண்டாக்க முடியும் உதாரணத்தை அவதானித்து பின் விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

உதாரணம் :- கதம்பம் 1. தம்பம் 2. கம்பம்

11. வானரம் 1. ........................ 2. ........................
12. ஆண்மை 1. ........................ 2. ........................

(XIX) எண் கோலத்தை அவதானித்து (?) கேள்விக்குறி இடப்பட்ட பெறுமானத்தை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.


13.



1) 1 2) 5 3) 11

14.



1) U F E 2) V F U 3) F V U


15.



1) 9 2) 5 3) 2


(XIX) உரு A க்கும் Bக்கும் இடையில் உள்ள தொடர்பைப் போன்று C உடன் ஒத்த தொடர்பைக் கொண்டிருக்கும் உருவினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

16.



17.



(XIX) பக்கத்திலுள்ள வட்டம் சுற்றுகின்றதென நினைத்துக்கொண்டு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வினாவிற்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து கீறிடுக.




18. S என்ற எழுத்திற்கு எதிராக G இருக்கும் போது W என்ற எழுத்திற்கு எதிராக எந்த எழுத்து இருக்கும்.
 1. K 2. I 3. J
19. E என்ற எழுத்திற்கு எதிராக L இருக்கும் போது S என்ற எழுத்திற்கு எதிராக எந்த எழுத்து இருக்கும்.
 1. F 2. G 3. H
20. I என்ற எழுத்து N எனும் எழுத்திற்கு எதிராக இருக்கும் போது G என்ற எழுத்து எந்த எழுத்திற்கு எதிராக இருக்கும்.
 1. W 2. S 3. E
21. S எனும் எழுத்திற்கெதிராக F எனும் எழுத்து இருக்கும்போது எவ்வெழுத்து E எனும் எழுத்திற்கு எதிராக இருக்கும்.
 1. M 2. K 3. L

(XIX) பின்வரும் எண்கோலத்தில் (? ) என்ற இடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

22.

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ➡ | 63 | ⬅ | 9 |
| 33 | ⬅ | 5 | ➡ | 62 |
| ? | ➡ | 84 | ⬅ | 12 |

................

(XIX) 23ம் 24ம் வினாக்களில் ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து அதில் சில வடிவங்கள் வெட்டப்பட்ட விதத்தை முதலில் தரப்பட்டுள்ள உரு காட்டுகிறது இக்கடதாசித் துண்டை மீண்டும் விரிக்கும் போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.


23.

1. 2. 3.

24.

1. 2. 3.


25. இங்கு நிறந்தீட்டப்பட்ட பகுதியின் சரியான பெறுமதி?



 1. 2 2. 3 3. 4

26. சாரங்கனிற்கு கஜந்தனிலும் பார்க்க 8 மாபிள்கள் கூடுதலாகக் கிடைத்தது கஜந்தனிற்கு பிரியங்காவிலும் பார்க்க 20 மாபிள்கள் கூடுதலாகக் கிடைத்தது மூவருக்கும் கிடைத்த மாபிள்களின் மொத்த எண்ணிக்கை 78 எனின் பிரியங்கன் பெற்ற மாபிள்களின் மொத்த எண்ணிக்கை என்ன?
 1. 5 2. 10 3. 15
27. கீழே தரப்பட்டள்ள 6 எண்களில் ஒரே இலக்கங்களைக் கொண்டுள்ள இரு எண்களின் கீழ் கோடிடுக
 95 321, 91357, 64253, 35129, 26518, 48256
28. 7, 6, 5, 4 எனும் இலக்கங்களிலிருந்து ஒரு தடவைக்கு இரு இல்க்கங்களை எடுத்து எழுதத்தக்க இரட்டை எண்களின் எண்ணிக்கை எத்தனை?
 1. 6 2. 8 3. 4

(XIX) 10 cm நீளமுள்ள மரக்குற்றிகளாலன சதுரமுகி ஒன்று அருகில் உள்ளது. அதை அவதானித்து கேட்கப்படும் 29 முதல் 32 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.



29. இச் சதுரமுகியில் எத்தனை மரக்குற்றிகள் உள்ளன.
 1. 11 2. 12 3. 13
30. இம் மரக்குற்றிகள் கொண்ட சதுரமுகிக்கு எமக்குத் தெரியும் 3 பக்கமும் நீல நிற மை பூசப்பட்டது எஞ்சிய பக்கங்களுக்கு சிவப்பு நிறமை பூசப்பட்டது எனின் சிவப்பு நிற மை ஒரு பக்கம் மட்டும் பூசப்பட்ட மரக்குற்றிகள் எத்தனை?
 1. 8 2. 7 3. 5
31. இம்மரக்குற்றிகள் எல்லாவற்றையும் நீளப்பாட்டில் தொடுமாறு வைத்தால் அதன் உயர்ந்த பட்ச நீளம் என்ன?
 1. 100cm 2. 110cm 3. 120cm
32. இம் மரக்குற்றிகளில் ஒரு மேற்பரப்பு 50 சதுர சென்ரி மீற்றர் கொண்ட மரக்குற்றிகள் எத்தனை உண்டு?
 1. 8 2. 14 3. 4
33. 30 பேர் செல்லத்திட்டமிடப்பட்டிருந்த கல்விச் சுற்றுலாவிற்கு ஒருவர் செலுத்த வேண்டிய பேருந்துக் கட்டண ரூபா 200.00 ஆகும் தவிர்க்க முடியாத காரணங்களினால் 5 பேர் பங்குபற்ற வில்லை. இவர்களின் கட்டணத்தை எஞ்சியவர்கள் பகிர்ந்து செலுத்தினர். எனில் சுற்றுலா சென்ற ஒருவர் கட்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
 1. ரூபா 200.00 2. ரூபா 380.00 3. ரூபா 240.00

(XIX) 34ம் 35ம் வினாக்களில் உரிய முறையில் சொற்கள் பிரித்து எழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன அவ்வாக்கியங்களிலுள்ள சொற்களை உரிய முறையில் பிரித்துக் கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

34. அதன்க ால்களில்கூ ரிய நக ங்கள் உள் ளன.
 ...........................................................
35. உற வினர் கள்தே நீர்விருந் துபசா ரத்தில்க லந்து கொண்டனர்.
 ...........................................................
36. கண்ணன் பெற்றோரின் ஏக புதல்வன் அவனின் சகோதரிகள் உயர் கல்வி கற்கின்றனர் பெற்றோர்கள் தொழில் புரிகின்றனர். கண்ணன் வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர் ஆறு பேர் எனின் கண்ணனின் சகோதரிகள் எத்தனை பேர்.


(XIX) கடந்த 2006ம் ஆண்டு அண்மிய 99 பாடசாலைகளில் திருக்குறள் மனனப் போட்டியில் ஒன்று முதல் ஐந்து வரையான இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அண்மிய 27 பாடசாலைகளில் | ஆண் | ஆண் | பெண் | பெண் | ஆண் |
| அண்மிய 19 பாடசாலைகளில் | ஆண் | பெண் | பெண் | ஆண் | பெண் |
| அண்மிய 53 பாடசாலைகளில் | பெண் | ஆண் | பெண் | ஆண் | ஆண் |

37. அண்மிய 99 பாடசாலைகளில் முதலாம் மூன்றாம் இங்களைப் பெற்ற ஆண்மாணவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?
38. அண்மிய 99 பாடசாலைகளில் முதல் ஐந்து இடங்களில் வந்துள்ள பெண் மாணவிகளின் எண்ணிக்கை என்ன.

(XIX) அருகிலுள்ள விபரங்களின் படி கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

39. 6 ரொபியும் 5 பென்சில்களினதும் விலை என்ன.
 1. 55.00 2. 40.00 3. 60.00
40. ரொபி இரண்டின் விலை என்ன.
 1. 15 ரூபா 2. 8 ரூபா 3. 5 ரூபா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன்
கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடத்திய
க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் - ஒகஸ்ட், 2008

## வணிகப்புள்ளிவிவரவியல்

3 மணித்தியாலங்கள்

## வணிகப்புள்ளிவிவரவியல்-01

பகுதி-I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி-II இலுள்ள நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி-I

01. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் மெய்யானவையா, பொய்யானவையா என்பதைச் சுருக்கமாக உமது நியாயத்தைத் தந்து எடுத்துரைக்குக.
 அ) கள ஆய்வுமுறையில் சேகரிக்கப்படும் தரவுகள் முதல் நிலைத் தரவுகள் ஆகும்.
 ஆ) வினாக்கொத்து ஆய்வில் முதலில் மேற்கொள்ளப்படும் செயற்பாடாக திருத்தியமைத்தல் அமைகின்றது.
 இ) வலையுருவரையம் தரப்பட்ட நிலையில் பரம்பல் ஒன்றின் வகையை அறியலாம்.
 ஈ) Z கோட்டுப்படங்கள் மூன்று வகையான எண்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவை உண்மை எண்கள், திரட்டிய எண்கள் மற்றும் நகரும் ஆண்டுத் தொகை ஆகும்.

02. பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைத் தெளிவாக எழுதுக.
 அ) இலங்கையில் கடந்த ஐந்து வருடங்களுக்கான தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றின் ஏற்றுமதியை வெளிப்படுத்தக்கூடியது.
 1) Z கோட்டுப் படம். 2) ''பை'' கோட்டுப் படம். (Pie Chart) 3) பல்லினச் சலாகை வரைபு. 4) லோரன்ஸ் வளையி.
 ஆ) இரண்டு காலத்துடன் மாறும் தரவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வரையப்படுவது
 1) கிடையான சலாகை வரைபு (Horizontal Bar Digagram) 2) '' Z '' வளையி. 3) லோரன்ஸ் வளையி. 4) ''பை'' கோட்டுப் படம். (Pie Chart)
 இ) 13 ஆம் தரத்தில் படிக்கும் பெருமளவு மாணவர்களின் உயரம் 5' 5 ''ஆகும். கீழ்வருவனவற்றுள் எந்த மையநாட்டப் பெறுமதி அளவு இதனைப் பிரதிபலிக்கும்?
 1) இடையம். 2) ஆகாரம். 3) இடை. 4) மூன்றாம் காலணை.
 ஈ) பின்வருவனவற்றுள் பரிகை அளவீடுகளைக் கொண்டவை,
 1) காலணைகள், சதமாணைகள். 2) காலணைகள், தசமாணைகள் 3) இடைவிலகல், தரவிலகல். 4) காலணைகள், இடைவிலகல்.

03. இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான பதம்/பதங்கள்/ சொற்றொடரை எழுதுக.
 அ) எல்லா மையநாட்ட அளவைகளில் .......................... தான், தனித்தன்மையில்லாத ஒரேயொரு அளவையாகும்.
 ஆ) ஒரு நிகழ்ச்சிக்கான நிகழ்தகவு ஒரு போதும் ........................ இலும் கூடியதாக இருக்க முடியாது.
 இ) பொய்சோன் பரம்பல் ஒன்றின் நியமவிலகல் 5 ஆக இருக்குமாயின் அதன் இடை ........... ........................ ஆகும்.
 ஈ) P(A∪B)=P(A)+P(B) ஆயின் A, B ஆகிய நிகழ்ச்சிகள். ........................... ஆகும்.

04. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உண்மையானவையா? பொய்யானவையா? என்பதைக் கூறி, உங்கள் நியாயத்தை சுருக்கமாக எடுத்துரைக்குக.
 அ) துணிவு குணகமொன்றின் வீச்சு -1 இலிருந்து +1 வரையான பெறுமதிகளைக் கொண்டிருக்கும்.
 ஆ) A∪(B∩C) = (A∪B)∩(A∪C) ஆகும்.
 இ) நிகழ்ச்சி ஒன்று A இல் இல்லாத மூலகங்களைக் கொண்டிருக்குமாயின் அந்நிகழ்ச்சி எளிய நிகழ்ச்சி என அழைக்கப்படும்.
 ஈ) 6, 3, 9, 2, 4, 6 எனும் பரம்பலின் இடையம் 3.5 ஆகும்.

05. பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைத் தெளிவாக எழுதுக.
 அ) $P_{B/A} = P(B)/P(A)$ எனின், A, B நிகழ்ச்சிகள்,
 1) A⊂B 2) B⊂A 3) A=B 4) எதுவுமல்ல.
 ஆ) உற்பத்தியளவிற்கும்பயன்படுத்தப்படும்மின்சாரசெலவுக்குமிடையேகாணப்படும் இணைப்பு,
 1) பூரண எதிர் இணைப்பு. 2) வலிதான எதிர் இணைப்பு. 3) நலிவான நேர் இணைப்பு. 4) வலிதான நேர் இணைப்பு.
 இ) பொய்சோன் பரம்பல் ஒன்றின் P(X=4) = P(X=5) எனின், அப்பரம்பலின் இடை,
 1) 1 2) 5 3) 2 4) அறியமுடியாது.
 ஈ) செவ்வன் பரம்பல் ஒன்றின் இடை 75 ஆகவும் மாறல்திறன் 25 ஆகவும் உள்ளன. இதன் மேல் காலணைப் பெறுமானம்,
 1) 58. 25 2) 71.65 3) 78.35 4) 91. 75

06. இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான பதம்/ பதங்கள்/சொற்றொடரை எழுதுக.
 அ) இரண்டு நிகழ்ச்சிகள் சாராதவை எனின் அவற்றின் நிரப்பி நிகழ்ச்சிகளும் ..................... ஆகும்.
 ஆ) எழுமாற்று மாறியொன்றின் எதிர்வுப்பெறுமானம் அதன் ..................... சமனாகும்.
 இ) X~Bin(4,1/6) எனின், P(X=3) க்குரிய நிகழ்தகவு ..................... ஆகும்.
 ஈ) வழு உறுப்பு சம்பந்தப்படாத பிற்செலவு மாதிரியுரு .....................மாதிரியுரு எனப்படும்.

07. பின்வரும் அட்டவணையிலிருந்து காலணை விலகல், நியம விலகல் என்பவற்றைக் காண்க.

| X | Y |
|---|---|
| 1 | 1 |
| 2 | 2 |
| 3 | 3 |
| 4 | 2 |
| 5 | 1 |

08. P(A) = 13/25, P(B) = 9/25, P(A/B) = 5/9 எனின்,
 1) P(B/A) 2) P(A∪B) 3) $P(A^1)/P(B^1)$ 4) $P(A∪B^1)$

09.

| X | 0 | 0 | 0 | 0 |
|---|---|---|---|---|
| P(X) | C | $C^2$ | $C^2 + C$ | $3C^2 + 2C$ |

பரம்பலின் C யின் பெறுமானத்தை மதிப்பிட்டு எதிர்வுப் பெறுமானத்தைக் கண்டறிக.

10. X என்னும் சராசரி மாறியினதும் Y என்னும் சாந்த மாறியினதும் சராசரிகள் முறையே 36,85 ஆகவும், நியமவிலகல் 11, 8 ஆகவும் இருப்பதோடு இணைப்புக்குணகம் 0.66 ஆகவும் இருப்பின் இழிவு வர்க்க முறையிலான பின்செலவு சமன்பாட்டைக் கண்டறிக.

### பகுதி-II

11. அ) விஞ்ஞான ரீதியான சமூக ஆய்வுக்கு ஏன் புள்ளிவிவரவியல் பயனுள்ள கருவியாகும்?
 ஆ) புள்ளிவிவரவியலில் ஏற்படும் மாதிரித் தவறுகளைக் குறிப்பிடுக.
 இ) புள்ளிவிவர முறையின் நோக்கம் அதிகளவிலான எண் தரவுகளை எளிதாகக் காட்டலாகும். விளக்குக.
 ஈ) ஆசிரித்திலின் மூலம் எவ்வகைக் குறைபாடுகள் செவ்வை பார்க்கப்படுகின்றன?

12. அ) நேர் மற்றும் எதிர் பெறுமானங்களை காட்டக்கூடிய சலாகை வரைபைக் குறிப்பிட்டுப் பொருத்தமான 3 உ+ம் தருக.
 ஆ) அட்டவணை ஒன்றிலிருந்து பெறக்கூடிய பயன்பாடுகள் யாவை?
 இ) விமாகி நிறுவனமொன்றில் வேலை செய்கின்ற ஊழியர்கள் பற்றிய விவரம் வருமாறு. 2007ஆம் ஆண்டில் காணப்பட்ட 900 ஊழியர்களில் 740 பேர் நிரந்தர ஊழியர்களாகவும், ஏனையவர்கள் தற்காலிக ஊழியர்களாகவும் காணப்பட்டனர். இந்நிறுவனத்தில் ஆண், பெண் விகிதம் முறையே 2:1 என்ற அடிப்படையில் காணப்பட்டது. தொழிலாளர்கள் 440 பேராகக் காணப் பட்டதுடன் அவர்களில் 100 பேர் தற்காலிக ஊழியர்கள் ஆவர். தொழிலாளர்களில் 100 பேர் பெண் ஊழியர்களாக காணப்பட்டதுடன் அவர்களில் 40 பேர் தற்காலிக ஊழியர்கள் ஆவர். நடுத்தர ஊழியர்களில் 60 பேர் தற்காலிக ஊழியர்களாக இருப்பதுடன் அவர்கள் ஆண் ஊழியர்கள் ஆவர். உயர்மட்ட ஊழியர்கள் 160 பேரில் அனைவரும் நிரந்தர ஊழியர்களாகக் காணப்படுவதுடன் அவர்களில் 40 பேர் பெண்கள் ஆவர். பொருத்தமான அட்டவணையை அமைக்குக.

13. அ) பிரிகை அளவீடுகளாக வீச்சு, தரவிலகல் ஆகிய அளவீடுகள் பற்றிக் குறிப்பிட்டு அதன் தகுதி, தகுதியீனம் ஆகியவற்றைத் தருக.
 ஆ) குடிலம் என்றால் என்ன என்பதையும் அதன் கணிப்பீட்டு சூத்திரங்களையும் தருக.
 இ) 10 வகுப்புகளில் காணப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:-
 56, 37, 28, 46, 25, 14, 54, 54, 61, 61
 1) பரம்பலின் இடை, இடையம், ஆகாரம், நியமவிலகல் ஆகியவற்றை மதிப்பிடுக.
 2) பரம்பலின் ஓராயத்தை மதிப்பிட்டு விவரிக்குக.
 3) பரம்பலின் குடிலத்தை கணிப்பிடுக.

14. அ) பெயர்சுவின் விதியைக் குறிப்பிட்டு விளக்குக.
 ஆ) கீழ்வரும் வகுப்புக்களை வென்வரைபடங்களில் நிழல்படுத்திக் காட்டுக.
 1) [(A∩B)∪C] 2) [(A∩B)∩C] 3) $[(A∩B)^1∪C]$
 இ) A, B, C என்னும் 3 பெட்டிகளில் காணப்படுகின்ற மின்குமிழ்கள் பின்வருமாறு:-

| | 60 வோல்ட்ஸ் | 90 வோல்ட்ஸ் |
|---|---|---|
| A | 40 | 8 |
| B | 24 | 2 |
| C | 32 | 6 |

இப் பெட்டிகளில் ஏதாவது ஒன்று எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு அதிலிருந்து மின்குமிழ் ஒன்று தெரிவு செய்யப்படுகின்றது.
 1) A என்னும் பெட்டியைத் தெரிவு செய்வதற்கான நிகழ்தகவு யாது?
 2) 60 வோல்ட்ஸ் மின்குமிழ் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான நிகழ்தகவு யாது?
 3) A என்னும் பெட்டியைத் தெரிவு செய்வதுடன், 60 வோல்ட்ஸ் மின்குமிழைத் தெரிவு செய்வதற்கான நிகழ்தகவு யாது?
 4) 60 வோல்ட்ஸ் மின்குமிழ் ஒன்றைத் தெரிவு செய்கின்றார்கள் எனின், அது A என்னும் பெட்டியிலிருந்து தெரிவு செய்வதற்கான நிகழ்தகவு யாது?

15. அ) பொய்சோன் பரம்பல் என்பதனால் நீர் கருதிக்கொள்வது யாது?
 ஆ) பொய்சோன் பரம்பல் ஒன்று எந்த நிபந்தனையின் கீழ் செவ்வன் பரம்பலுக்குப் பொருந்தும்?
 இ) காப்புறுதி கம்பனி ஒன்றில் காப்புறுதி செய்யப்பட்டுள்ள வாகனங்களில் மாதம் ஒன்றில் சராசரியாக 4 வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றன. வாகனமொன்றைத் திருத்துவதற்கு சராசரியாக 5,000/- செலவு ஏற்படுகின்றது.
 1) குறித்த மாதத்தில் 30, 000/- அல்லது அதைவிடக் கூடுதலாக செலவு ஏற்படுவதற்கான நிகழ்தகவு யாது?
 2) வருடத்தில் 200, 000/- அல்லது அதைவிடக் குறைவான செலவு ஏற்படுவதற்கான நிகழ்தகவு யாது?

16. அ) செவ்வன் பரம்பல் ஒன்றிற்கான நிபந்தனைகள் யாவை?
 ஆ) செவ்வன் பரம்பல் ஒன்றிக்கு பொருந்தக்கூடிய மூன்று உதாரணங்களை தருக.
 இ) இடையினையும் நியமவிலகலையும் ஒரே பெறுமானம் கொண்ட செவ்வன் பரம்பல் ஒன்றில் 60 வீதமான மாணவர்கள் 40 புள்ளியை விட உயர்வான புள்ளியைப் பெற்றுள்ளனர் எனின்,
 1) இப்பரம்பலில் இடை, நியமவிலகல் ஆகியவற்றை மதிப்பிடுக.
 2) இப்பரம்பலில் 60இற்கும் 70இற்கும் இடையில் எத்தனை வீதமான மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றிருப்பார்கள்?
 3) 65இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் நிகழ்தகவு யாது?

17. அ) மாறிகள் x, y என்பவற்றுக்கிடையேயான பெருக்கல் திருப்ப இணைப்புக்குணகம் r ஆயின், aயும் bயும் மாறிலிகளாக இருக்கும்போது, மாறிகள் x + a மற்றும் y + b என்பவற்றுக்கிடையேயான பெருக்கல் திருப்ப இணைப்புக்குணகம் யாது?
 ஆ) ஒரு விற்பனை ஆய்வில் காணப்படும் இழிவு வர்க்கப்போக்குச் சமன்பாட்டை ஒரு கம்பனி பெற்றுக் கொண்டது. y = 16 + 2x
 ( மூலம் 2000-x அலகுகள் = 1 வருடம், வருடம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட மொத்த அலகுகளின் எண்ணிக்கை)
 கம்பனி வருடம் ஒன்றுக்கு 30 அலகுகளை மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய பௌதீக வசதிகளைக் கொண்டுள்ளது என்பதுடன், குறைந்தபட்சம் அடுத்த தசாப்தம் வரையாவது இப்போக்கு முன்பிருந்ததைப்போலவே தொடர்ந்து செல்லும் என நம்புகின்றது.
 1) விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையில் வருடாந்த சராசரி அதிகரிப்பு யாது?
 2) கம்பனியுடைய எதிர்பார்க்கப்பட்டவிற்பனைகள், அதன் இன்றைய இயலளவுக்கு சமனாகக்கூடிய வருடம் எது?
 3) 2015 வருடத்துக்கான வருடாந்த விற்பனைகளை மதிப்பிடுக.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஜி.சீ.ஈ (சா/த) தரப் பரீட்சைப் பெறுபேற்றில் சாதனை நிகழ்த்திய 21 மாணவிகளும், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் பாடசாலைச் சமூகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் சாதனை மாணவிகள், விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா, ஆசிரியை திருமதி வாசுகி அரவிந்தனுக்குப் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (218)

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஏற்றவாறு உபகரணங்கள் திணைக்களத்தால் வழங்கப்படும்

## தீவக வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை25

விசேட தேவையுடைய மாணவர்களின் தேவைக்கேற்றவாறு உபகரணங்கள் வழங்கப்படும். அவர்களும் பாடசாலைகளில் உரிய முறையில் மதிக்கப்படுவர்.

இவ்வாறு தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.புவனேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் விசேட கல்வி விழிப்புணர்வு நாடக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

விசேட தேவையுடைய மாணவர்கள் பாடசாலைகளில் உரிய முறையில் மதிக்கப்படுவர். அவர்களுக்கேற்ற விசேட கற்றல் பொருள்கள் உள்ளன.

வலய மட்டம், மாகாண மட்டம், பாடசாலை மட்டம் என ஒவ்வொரு மட்டத்திலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் வளவாளர்களும் உள்ளனர். அவர்கள் உரிய வகையில் கல்வி புகட்டுவர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்குத் தேவையான உபகரணக் கொள்வனவுக்கென நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் பெற்றோர் ஒத்துழைப்பு வழங்கினால் வலயக் கல்வி அலுவலகம் உபகரணங்களை வழங்கும்.

எல்லோரிடமும், குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றின் விகிதாசாரம் கூடிக்குறையும்போதே பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே, விசேட தேவையுடைய பிள்ளைகளை வீடுகளில் வைத்திருக்காது, அவர்களையும் பாடசாலைக்கு அனுப்பி கற்பதற்கு வழிசெய்யவேண்டும்.

பாதிப்பான மாணவர்களிடம் மிகவும் அன்பாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

அவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டியது அவசியம். உளவியல் ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்க உளவளத்துறை உதவும்.

ஆசிரியர்கள் உளவள அறிவையும் பெற்றிருக்கவேண்டும். பாடசாலைகளில் உள்ள உளவள ஆசிரியர்கள், மாணவர்களின் உள, மன எழுச்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகவும் அக்கறை உடையவர்களாக இருக்க வேண்டும் - என்றார். (203-267)

## இலவச மருத்துவ சேவைக்கு பதிவுகள் மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

சமூக நலத்துறைத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகத்தால் இலவச மருத்துவ சேவையும் புனர்வாழ்வு முகாமும் நடத்தப்படவுள்ளன.

இதற்கான பதிவுகளை இன்று பிற்பகல் 2 மணிவரை சுண்டுக்குளிச் சந்தியில் உள்ள ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் மேற்கொள்ளமுடியும்.

மந்திகை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களில் இலவச மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (203-288)


## லயன்ஸ் கழக ஆதரவுடன் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜூலை25

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை எச்சாட்டி, யுவசக்தி வீதியிலும் நாளை சனிக்கிழமை சாவற்கட்டிலும் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நடமாடும் சேவை மூலம் இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (203)



உடுவில் குமரக்கோட்டம் ஸ்ரீமுருகன் கோயிலில் அண்மையில் இடம்பெற்ற கந்தபுராண படனப் பூர்த்தி விழாவில் பௌராணிகர் க.ந.பாலசுப்பிரமணியம் கந்தபுராண நூல் வாசிப்பதையும் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் பயன் சொல்வதையும் படத்தில் காணலாம்.

## வண்ணை. சிவன் ஆலய தேவி பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்.வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேவி பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை 10.45 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9.05 மணிக்குத் தேர்த்திருவிழா இடம்பெறும். மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

விசேட நாள்களைத் தவிர ஏனைய நாள்களில் காலை 5.30 மணிக்குத் திருவனந்தல், 6.30 மணிக்கு அபிஷேகம், 7.30 மணிக்குக் காலைச்சந்தி, 8 மணிக்குத் தம்பபூசை என்பன இடம்பெற்று 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

மாலைப் பூசைகள் 12 மணிக்கு உச்சிக் காலப் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெற்று மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் நிறைவடையும். (203)

## சின்னமடு மாதா யாத்திரைத் திருவிழா ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

ஊர்காவற்றுறை சின்னமடு மாதா யாத்திரை திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் ஆலயச் சூழலில் சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகள் என்பன ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை, உதவி அரச அதிபருடன் இணைந்து இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

ஆலயச் சூழலில் அமைக்கப்படவுள்ள கடைகளுக்கான உரிமங்களை, ஊர்காவற்றுறைப் பிரதேச சபை வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. (203-95)

## பணிவும் அடக்கமும் என்றும் பெருமையும் உயர்வும் தரும்

நாம் பேசும் போது மிகவும் அவதானமாகப் பேசுதல் வேண்டும். பிழையான தகவல்களை முன்வைத்தல், பயனற்ற பேச்சுப் பேசிக் கேட்போரது காலத்தை வீணடித்தல், தேவைக்கு அதிகமாகப் பேசுதல் என்பவையும் அடக்கமான செயற்பாடுகள் அல்ல.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்கிறார் திருவள்ளுவர்.

பணிவாக- அடக்கமாக- நடப்பதனால் எமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையை - உயர்வை- புலப்படுத்தும். காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரத்தினது கிளைகள் தாழ்ந்து இருக்கும். பொத்தி வெளிவந்த வாழை தலை சாய்த்து நிற்கும். கனி அற்ற கிளைகளும் பொத்தி வராத வாழையும் நிமிர்ந்து நிற்கும். தாழ்ந்த கிளைக்கும் தலை சாய்ந்த வாழைக்கும் தான் பெருமை.

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"

என்பது வள்ளுவர் வாக்கு.

நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். நேரம் பொன்னானது. இழந்த நேரத்தை மீண்டும் பெறமுடியாது. எமது நேரத்தைப் பாழாக்குவதுடன் மற்றவர்களது நேரத்தையும் பாழாக்குவதாக எமது செயற்பாடுகள் அமைந்து விடக்கூடாது.

ஞானக்கதிர்

எமது வாழ்வின் மேம்பாட்டிற்காக, எமது செயற்பாடுகள் சீராக நடைபெறுவதற்காக பல ஒழுங்கு விதி முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து வைத்திருப்பதும் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதும் அவசியம். அவற்றை மீறி நடத்தல் பண்பற்ற செயல். நாம் எமது செயற்பாடுகளை ஓர் ஒழுங்கு முறையில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு இறைவனே வழிகாட்டியிருக்கிறான்.

இப்பிரபஞ்சமே ஓர் ஒழுங்குமுறையில்தான் இயங்குகிறது. சூரியனைப் பூமி ஒழுங்காக வலம் வருவதால் தான் பருவ காலங்கள் ஒழுங்குமுறையில் ஏற்படுகின்றன. புவி தன்னைத்தானே ஒழுங்கு முறையில் சுற்றுவதனால் தான் இரவும் பகலும் ஒழுங்காக ஏற்படுகின்றன. சூரியத் தொகுதியின் கோள்கள், அவை சுற்றும் பாதை, அவற்றின் வேகம் யாவுமே ஓர் ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. நட்சத்திரங்களும் அவ்வாறே.

இவ்வாறான ஒழுங்குமுறை இல்லாதிருந்தால் இப்பிரபஞ்சத்திற்கு என்ன நடக்குமெனக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாதுள்ளது.

இப்பிரபஞ்சம், குறித்த விதிமுறைகளுக்கமைய ஓர் ஒழுங்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது விஞ்ஞானத்தின் அடிப்படை. சைவசித்தாந்தத்தின் அடிப்படையும் அதுவே.

மனிதனும் தனது செயற்பாடுகள் ஓர் ஒழுங்கு முறையில் அமைந்தால் மட்டுமே எல்லோருடைய வாழ்வும் செழிப்புறும் - ஒருவரால் ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாதிருக்கும்- என்பதை உணர்ந்துகொண்டதால், குடும்ப வாழ்க்கை முறை முதல் நாட்டின் நிர்வாகம் வரை யாவற்றிலும் ஒழுங்குமுறையைப் பேண விதிகளை ஏற்படுத்திக் கொண்டான்.

## வாசகர் திருமுகம்

### வீதியோரங்களில் கசிப்பு விற்பனை: மாணவர் கல்வியும் பாதிப்புறுகிறது

சாவகச்சேரிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு அருந்துவோரால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைகிறது.

சாவகச்சேரி கெருடாவில், கொட்டாம்பிட்டிப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பெருமளவு கசிப்பு பரல்களில் கச்சாய் வீதி, தபாற்கந்தோர் வீதி, மீசாலை, அல்லாரை, மட்டுவில், சரசாலை போன்ற இடங்களில் தாராளமாக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த இடங்களில் பி.ப. 5மணி தொடக்கம் வீதியோரங்களில் வைத்து கசிப்பு விற்பனை செய்யப்படுகிறது. இதனை அருந்துவோர் வீதிகளிலிருந்து பாட்டுப் பாடுவதாலும் உரத்துக் கதைப்பதாலும் மாணவர்கள் படிக்கமுடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

பகல்வேளையில் பரல்களில் கொண்டுவரப்படும் கசிப்பினை அப்பகுதியில் உள்ள கிணறுகளில் மறைத்து வைத்துவிட்டு, மாலையானதும் வெளியே எடுத்து விற்பனை செய்து வருகிறார்கள்.

பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை இல்லாததாலும், மதுவரித் திணைக்கள அலுவலகம் சாவகச்சேரியில் இல்லாததாலும் கசிப்பு விற்பனையாளர்கள், வீதிகளுக்கு பரல்களுடன் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

அடுத்த மாதம் பரீட்சைகள் நடக்க இருப்பதால் ஒருபுறம் மின்சாரத் தடை, மறுபக்கம் கசிப்பு அருந்துவோரின் தொல்லை ஆகியவற்றால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை தடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை.

கசிப்பு விற்பனையால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பினைக் கூறி, கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு அறிவுரை கூறிய எமது கிராமப் பெற்றோர் கசிப்பு உற்பத்தியாளர்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளனர்.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையினைத் தடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அரச அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து, மாணவர்கள் கல்வி நிலையில் விருத்தி பெற நடவடிக்கை எடுக்கமாட்டார்களா?

-பாதிப்புறும் மாணவர்கள்.

மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் அசாதாரண சூழல் நிலவியபோதும் அயராது கல்விப் பணியாற்றியவர் கந்தையா அதிபர்

## வடமராட்சி வலயப் பணிப்பாளர் நினைவு கூருகின்றார்

சாவகச்சேரி, ஜூலை 25

தென்மராட்சியில் அசாதாரண சூழல் நிலவியபோது பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்தனர். அதன் போது இடம் பெயராதிருந்த மாணவர்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு கல்விப் பணியை சிரமங்களின் மத்தியிலும் மேற்கொண்டவர் அதிபர் த.கந்தையா.

இவ்வாறு தென்மராட்சி வலயத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளரும் தற்போது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றுபவருமான வ.செல்வராசா இவ்வாறு தெரிவித்தார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர் த.கந்தையாவின் மணிவிழா நிகழ்வு அண் மையில் நடைபெற்றது. இதில் விருந்தி னராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

தனது வாழ்நாளில் உயரிய எண்ணங்கள், சிந்தனைகள் கொண்டவராக சமூகத்தில் வாழ்ந்த உயர்ந்த மனிதன். மாணவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சமாகத் திகழ கல்வி தேவை. எனவே அந்த மாணவர்களை எப்படி கல்வி கேள்விகளில் வழிப்படுத்தலாம் என எண்ணிய அதிபர் இவர்.

தென்மராட்சியில் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் இடம்பெயர்ந்தார்கள். இதன்போது தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகமும் சகல உடைமைகளையும் விட்டு விட்டு இடம்பெயர்ந்தது இடப்பெயர்வின் போது அதிபர் த.கந்தையா இடம் பெயரவில்லை. தென்மராட்சியில விடத்தற்பளை கிராம மக்கள் இடம்பெயராது அந்தப் பகுதியில் கஷ்டங்களின் மத்தி யிலும் தங்கியிருந்தார்கள். இதன்போது அந்த மக்களின் பிள்ளைகளை ஒன்று திரட்டி விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான கல்வியைப் புகட்டினார். அந்த மாணவரின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். ஷெல்கள் அயற்கிராமங்களில் வீழ்ந்து வெடித்த போதும் கல்விப் பணி செய்தார். இதனால் பெற்றோர்கள், மாணவர்கள், கல்விமான்கள் மத்தியில் நல்ல நன் மதிப்பை பெற்றிருந்தார்.

தென்மராட்சியில் மீளக் குடியமர அனுமதித்தபோது இங்குள்ள திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின் வளங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. அத்துடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் எமது கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள் எனக்கு உதவினார்கள். 2000ஆம் ஆண்டளவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்கும் உதவிகள் வழங்க கல்வித் திணைக்களம் திட்டமிட்டது.

அங்கு பௌதீக வளங்களையும் உயர்த்த வேண்டிய தேவை இருந்தது. ஆனாலும் கல்விச் செயற்பாடுகள் அதிகமாக இந்தப் பாடசாலையில் காணப்பட்டது. இதற்கெல்லாம் காரணகர்த்தாவாக செயற்பட்டவர் அதிபர் த.கந்தையா - என்றார்.

சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் உரைநிகழ்த்து கையில்.

1983ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தில் இரு பாடசாலைகள் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டன. ஒன்று கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். இரண்டாவது கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்.

இவற்றில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் மாணவர்களது தொகை அதிகரித்து கல்விப் பணியில் சிறந்து விளங்குகின்றது. இதற்கு முதல் காரணம் பாடசாலையின் அதிபராகத்தான் இருக்கவேண்டும். பாடசாலை அதிபர் பாடசாலையை திறமையாகக் கொண்டு நடத்தும் அதிகாரத்தை தன்வசம் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பதுடன் அந்தப் பாடசாலை சார்ந்த சமூகத்துடன் ஒட்டி இருக்க வேண்டும். சமுதாயத்தில் மனித நேயமிக்கவனாக இருக்க வேண்டும். சமுதாயத்தை மதிக்கின்ற பண்புள்ளவனாக இருக்க வேண்டும். அதனால் தான் இந்தப் பாடசாலையின் அதிபர் 16 வருடங்கள் இந்தப் பிரதேசத்தில் உள்ள திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அதிபராக பணிபுரிந்தார் - எனக் குறிப்பிட்டார். (202-131)

# தமிழ் யுவதி ஒருவர் ஹொரணையில் கைது!

கொழும்பு, ஜூலை 25

ஹொரணப் பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் தமிழ் யுவதி ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டார்.

இந்த யுவதி ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியற்றிவந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட யுவதி பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# இனந்தெரியாதோரின் சூட்டுக்கு மல்வானையில் பெண்ணொருவர் பலி

கொழும்பு, ஜூலை 25

மல்வானை பொல்ஹேனே வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குறிப்பிட்ட பெண்ணின் வீட்டுக்குச் சென்ற ஆயுததாரிகள் அவரைச் சுட்டு விட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்பட்டது. (சி)

# தமிழக மீனவர் பிரச்சினை குறித்து பிரதமருடன் நேரில் பேசப்போவதாக கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஜூலை25

தமிழக மீனவர்களின் பிரச்சினை குறித்து, பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்துப் பேசவுள்ளதாக தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் மத்திய அரசு பெற்றுள்ள வெற்றி, 4 ஆண்டுகள் காலம் மக்களுக்கு ஆற்றிய தொண்டுக்குக் கிடைத்த வெற்றியாகும்- என்றும் முதலமைச்சர் சொன்னார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதும். சென்னை கோபாலபுரத்தில் முதலமைச்சர் கருணாநிதி வீட்டு முன்பு கூடியிருந்த தி.மு.க. தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினார்கள்.

இதன் பின்பு முதலமைச்சர் கருணாநிதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

டில்லி செல்லும்போது பிரதமரிடம் தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றி நேரில் பேசுவீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு -

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் நேரில் பிரதமரைச் சந்தித்து மீனவர்கள் பிரச்சினை பற்றிப் பேசியிருக்கிறார்கள். நானும் பேசுவேன் - என்று கருணாநிதி பதில ளித்தார்.

சோனியா காந்திக்கும், பிரதமருக்கும் வாழ்த்துத் தெரிவித்து விட்டீர்களா? என்று கேட்ட தற்கு,

தெரிவித்தேன் எனக் கூறினார். (சி)

# போலி ஆவணங்கள் தயாரித்த ஒருவர் வெள்ளவத்தைப் பகுதியில் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 25

வெளிநாடு செல்வதற்கான போலிச் சான்றிதழ்களைத் தயாரித்துக் கொடுக்கும் இரகசிய இடம் ஒன்றை பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினர் வெள்ளவத்தையில் கண்டுபிடித்திருக்கின்றனர். அத்துடன் இதனை நடத்தி வந்தார் என்று கூறப்படும் சந்தேக நபர் ஒருவரும் பொலிஸாரிடம் வசமாக மாட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த 8 வருட காலமாக இயங்கிவந்த இந்த சட்டவிரோத நிலையத்தில் ஒரு தொகைப் போலிப் பட்டச் சான்றிதழ்கள், ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரணதர சான்றிதழ்களை வெள்ளவத்தைப் பொலிஸார் கைப்பற்றியிருக்கின்றனர்.

வெளிநாடு செல்வதற்காக இதுவரை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட போலிச் சான்றிதழ்கள் இந்த இடத்தில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்று ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக வெள்ளவத்தைப் பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெள்ளவத்தைப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு, கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். (அ-சி)

# அபிவிருத்திச் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

# வெளிநாடுகளின் தேவைக்காக அல்ல; நாட்டு மக்களின் விருப்புக்கு அமையவே அரசு திட்டங்களை வகுக்கும்!

## சொல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை 25



''நாட்டு மக்களின் விருப்புக்கு அமையவே அரசு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதனை விடுத்து வெளிநாடுகளினதோ அல்லது அரசியல் கட்சிகளி னதோ தேவைக்காக திட்டங்களை வகுக்க முடியாது''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்ற மாமிச உணவு உற்பத்திப்பொருள் ஏற்றுமதியாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான காலப் பகுதியிலிருந்து 2008 வரை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிவிலக்கினைப் பெற்றுக்கொள்வதற்கு அப் பொருள்களை விலைக்கு வாங்கும் நாடுகளின் இணக்கத்திற்கு ஏற்ப வரிவிலக்கினை மேலும் 3 வருடங்களுக்கு நீடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை இலங்கைக்குக் கிடைக்காமல் செய்து அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளில் சில தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கொடுக்கப்படக்கூடாது என்ற வேண்டுகோளை அவர்கள் சர்வதேச மட்டத்தில் விடுப்பது வேதனைக்குரிய விடயமாகும். நாடொன்றுக்கு கிடைக்கும் நிவாரணமானது ஒரு நபருக்கோ அல்லது அரசுக்கோ மட்டும் கிடைக்கும் நிவாரணம் அல்ல. அது நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்குமான நிவாரணமாகும்.

இலங்கையைப் பற்றி தவறான பிரசாரங்களில் ஈடுபடும் நம்மவர்களில் சிலர் இதன் மூலமாக இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க முனைவதுடன் அது முழு இலங்கையரையும் பாதிக்கக்கூடிய செயலாகும். இன்று நாமனைவரும் முதலில் நாட்டைப் பற்றிச் சிந்தித்தே தீர்மானம் எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

எனது பதவிக்காலத்தில் எச்சந்தர்ப்பத்திலும் இந்நாட்டுக்கு கிடைக்கும் நிதி உதவியையோ நிவாரணத்தையோ இல்லாமற் செய்யமாட்டேன். - என்று தெரிவித்தார். (சி)



அல்வாய் வடமேற்கு இளம்பிறை சனசமூக நிலையத்தினரால் கல்வியியலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நிலைய முன்றிலில் நிலையத்தலைவர் சு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் -

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, கல்வியியலாளர் கௌரவிப்புப் பெறும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கில விரிவுரையாளர் த.மோகனுக்கு மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

திருமதி கு.கலாமணி கௌரவிப்புப் பெறும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவன் த.ஜனார்த்தனன், ஆசிரியை திருமதி கோமகள் வசீகரன் ஆகியோருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதை அடுத்துள்ள படங்கள் காட்டுகின்றன. (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## சர்வதேசத்திடம் சம்பந்தர் கோருகின்ற நியாயம்

பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மையின் குறியீடாக வெளிப்பட்டிருக்கும்'மஹிந்த சிந்தனை' அரசு, ஈழத் தமிழர்களை எப்படியெல்லாம் அடக்கி, ஒடுக்கி, இன அழிப்பை மேற்கொண்டு வருகின்றது என்பதை நாடாளுமன்றத்தில் புட்டுப்புட்டு வைத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.

இப்போது தன்னுடைய கொடூர யுத்தக் கோர நடவடிக்கைகள் மூலம் வன்னிப் பெரு நிலப் பரப்பில் பேரழிவு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் கொழும்பு அரசு, ஈழத் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் எவ்வாறு அவர்களின் அடிப்படைக் கட்டுமானங்களைச் சிதைத்து, அழித்து வருகின்றது என்பதையும் புள்ளி விவரங்களோடு அவர் அங்கு விவரித்திருக்கின்றார்.

தமிழர்களின் மொழி, கலாசாரம், பாரம்பரியம், தாயக மண், உத்தியோகம், தொழில்வளம், தாயக மூலவளம், சமூகக் கட்டமைப்பு, கட்டுமானங்கள் என்பவற்றை அரசு ஒவ்வொன்றாக இலக்கு வைத்துத் தாக்கி அழிக்கிறது அல்லது ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்கின்றது என்பதை அவர் முழு அடிப்படைத் தகவல்களோடும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கொழும்பில் இடம்பெறும் குண்டு வெடிப்பில் கொல்லப்படுவோருக்கு அல்லது காயமடைவோருக்கான நஷ்ட ஈட்டைக் குண்டு வெடித்த அதிர்ச்சி அடங்கு முன்னரே வழங்குவதில் துடியாய்த் துடிக்கும் இந்த அரசு, வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளினால் உயிரிழப்போர் மற்றும் பாதிக்கப்படுவோர் விடயத்தில் மட்டும் வேண்டும் என்றே மாற்றாந்தாய் மனப்பான்மையில் செயற்படுகின்றது. அங்கு பாதிக் கப்படுவோர் தமிழர்கள் என்பதால் இந்தத் திட்டமிடப் பட்ட புறக்கணிப்பு.

கிழக்கில் மூதூர், சம்பூர் பகுதிகளில் மேற்கொள்ளப் பட்ட படை நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்ட சுமார் முந்நூறு பேரில், இருநூற்றியைம்பதுக்கும் அதிகமானோரின் பெயர், விவரங்களை விவரமாகத் தாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தும் கூட அவர்களின் குடும்பங்களுக்கு ஆண்டுகள் கடந்தும் நஷ்ட ஈடோ, நிவாரணமோ வழங்கப்படவேயில்லை என்பதை சம்பந்தர்நாடாளுமன்றத்தில் புட்டுவைத்திருக்கிறார்

உயிரிழந்தோருக்கு நஷ்டஈடு வழங்குவதில் கூட இனத்துவேஷம் காட்டும் ஈனத்தனமான அரச நிர்வாகம் இது என்பதைப் பண்பாடான வார்த்தைகளிலே அவர் எடுத்துரைக்க - இடித்துரைக்க - தவறவேயில்லை.

மூதூர் மற்றும் அதை அண்டிய பகுதிகளிலே அரசுப் படைகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது, அந்த மண்ணின் மைந்தர்கள் - பூர்வீகக் குடியினர் - அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். அத்தகைய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று இடம் பெயர்ந்து அவல வாழ்வு வாழ்கின்றன.

அவர்களின் தாயகப் பூமியைக் கபளீகரம் செய்துள்ள அரசுப் படையினர் அங்கு அவர்களை மீளக்குடியேற அனுமதிக்கிறார்கள் இல்லை. அப்படித் தடுப்பதற்குப் படைகளுக்கு முகாந்திரம் ஏதுமேயில்லை.

ஆனால் அந்தப் பிரதேசங்களில் அம்மக்களின் அனுமதி யில்லாமல் - அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்து, ஊடறுத்துப் பல புதிய பாதைகள், வீதிகள் அமைக்கப் படுகின்றன. இந்த வீதிகளை ஒட்டி இரு மருங்கிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் முயற்சிகள் நடக்கின்றன, திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பன பற்றிய சூசகத் தகவல்களை சம்பந்தர் தமது உரையில் கோடிகாட்டியிருக்கின்றார்.

தமிழர்களின் இனத் தனித்துவத்தை - அடையாளத்தை - இல்லாதொழித்து அவர்களை அடிமைப் படுத்தி, இலங்கைத் தீவில் காலங்காலமாக அவர்களுக்கு இருந்துவரும் தாயக உரிமையை நிர்மூலமாக்குவது ஒன்று மட்டுமே மஹிந்த அரசின் கடும் போக்குக் கொள்கையாகும் என்பதை நாடாளுமன்றத்தில் ஐயம் திரிபற விளக்கியிருக்கின்றார் சம்பந்தர். -

இந்த உண்மை நிலையை - யதார்த்தத்தை - புரிந்து கொண்டு சர்வதேசம் நியாயமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய காலகட்டம் - வேளை - வந்துவிட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஈழத் தமிழர்களுக்கு இந்த அரசு நீதியான - நியாயமான - தீர்வை முன்வைக்க மாட்டாது என்பது இன்று தெளிவாகிவிட்டது; வெட்டவெளிச்சமாகிவிட்டது. தமிழர்களை அடிமைப்படுத்தி, இல்லாதொழிக்கும் பேரினவாதச் சிந்தனை ஒன்றைத் தவிர வேறெதுவும் இலங்கை அரசுக்குக் கிடையவே கிடையாது' என்பது உறுதியாகிவிட்டதால், ஈழத் தமிழர்களை அவர்கள் தம் வழியில் தனிவழி செல்ல சர்வதேசம் அனுமதித்து ஒத் துழைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஐக் கிய இலங்கைக்குள் தீர்வு காணும் கடைசி வாய்ப்புக்கும் இலங்கை இணங்காததன் காரணத்தால், வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து தனி வழி செல்வதற்கான தமிழர்களின் உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்று மன்றாடியிருக்கிறார் சம்பந்தர்.

தமிழர் தரப்பின் மிதவாதத் தலைவரான அவரது நியாயம் கோரும் அழைப்பு சர்வதேசத்தின் காதில் விழுமா?

## விடுதலைப்புலிகளின் ஆயுள் முடிவதற்கு இன்னும் சிறிது காலமே உண்டு என்கிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூலை 25

விடுதலைப்புலிகளின் ஆயுள் குறைந்து கொண்டே வருகிறது. அது முற்றாக முடிவடைவதற்கு இன்னும் சிறிது காலமே உள்ளது என்று விமல் வீரவன்ஸ எம்.பி. கூறியிருக்கின்றார்.

கிளிநொச்சியில் இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை ஏற்றும் நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் அந்த இலக்குடன் படையினர் மிகத் துணிச்சலுடன் போராடி வருகின்றனர் என்றும் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் நாடாளு மன்றில் மேலும் கூறினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் ஆயுட்காலம் குறைந்து விட்டது. படையினரின் துணிச்சல் மிக்க நடவடிக்கை மூலம் புலிகள் பாரிய தோல்வியைச் சந்தித்துள்ளனர். 30 வருட காலத்தில் இப்போதுதான் புலிகள் என்றுமில்லாதவாறு பாரிய தோல்வியைச் சந்தித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில்தான் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இதுவே அவர்களின் தோல்வியைப் பறைசாற்றுகிறது.

பயங்கரவாதிகள் தோல்வியடையும் போதெல்லாம் இவ்வாறு யுத்த நிறுத்தத்தை அறிவிப்பது வழமை. இதை இந்த அரசு கணக்கில் எடுக்கக் கூடாது.

இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கும் இந்த நாடு ஒரு சுடுகாடாக மாறுவதற்கும் பிரபா கரன்தான் காரணம். அந்தப் பிரபாகர னின் உயிர் பிரியப் போகும் நிலை யில் தான் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எமக்கு இப்போது தேவையாக இருப்பது பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதுதான். தற்போது கிழக்கில் மலர்ந்திருக்கும் ஜனநாயகம் வடக்கிலும் மலர வேண்டும் என்றால் புலிகள் அழிக்கப்பட்டே ஆகவேண் டும்.

படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றி அங்கு இலங்கைத் தேசியக் கொடியை நாட்டும் நாள்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மிக விரைவில் கிளிநொச்சியையும் கைப்பற்றி அங்கு எமது நாட்டின் தேசியக் கொடி ஏற்றப்படும் - என்றார். (சி)

## இலங்கையில் தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயல்கின்றதாம் இந்தியா

### நாடாளுமன்றில் அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 25

இலங்கையின் தேசிய பிரச்சினையை சிக்கல் நிலைக்குள் தள்ளி - இலங்கையை முற்றாக ஆக்கிரமித்து அதனூடாக தனது சர்வாதிகாரத்தை இலங்கையில் நிலைநாட்ட இந்தியா முயற்சி செய்து வருகிறது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ் சாட் டினார்.

இது தொடர்பாக அவர் விசேட அறிக்கை ஒன்றை நாடாளுமன்றில் வெளியிட்டு உரையாற்றுகையி லேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கை மீதான இந்தியாவின் ஆதிக்கம் நாளுக்குநாள் ஆதிகரித்துக் கொண்டு போகின்றது. இந்தியாவிற்கு அருகில் உள்ள இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்த இந்தியா முயன்று வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக, நேபாளம், பூட்டான் மற்றும் இலங்கை போன்ற நாடு களில் இந்தியாவின் தலையீடு இருந்து வருகின்றது.

இலங்கையின் பொருளா தாரத் தில் தற்போதுவரை கடுமையான ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ள இந்தி யா பொருளாதாரம் முழுவ திலும் ஆதிக்கத் தைச் செலுத்தவே முற்படுகிறது.

அடுத்த மாதம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை இந்தியாவிற்கு வழங்க பேச்சு ஒன்றும் இடம் பெறவுள்ளது. மன்னார் எண்ணெய் அகழ்வுப் பணி சம்பூர் மின் உற்பத்தி நிலையம் போன்றவற்றிலும் தற்போது இந்தியா கை வைத்துள்ளது.

**தேசிய பிரச்சினையிலும் தலையிடுகிறது**

இதற்கு அப்பாலும் சென்று இலங்கையின் தேசிய பிரச்சினையில் இந்தியா தலையிடுகிறது.

தேசிய பிரச்சினை மீதான இந்தியாவின் தலையீடு காரணமாகத்தான் படையினரின் வடமராட்ச்சி யுத்த நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்பட்டது. இதனால் புலிகள்தான் இலாபம் அடைந்துள்ளனர்.

இந்தியப் படையினர் இலங்கை வரவழைக்கப்பட்டு இலங்கையின் தேசியப் பிரச்சினை மேலும் சிக்கலாக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் கொலை செய்தும்கூட இந்தியா புலிகளுக்கு உதவி வருகிறது.

அண்மைக் காலமாக இந்தியாவின் தலையீடு மிக அதிகமாகவே உள்ளது. இலங்கைப் படையினர் வெற்றியின் விளிம்பில் உள்ளனர். அந்த வெற்றியை இல்லாது செய்யும் நடவடிக் கையில் தான் இந்தியா தற்போது ஈடுபட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும். தேசியப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்க இலங்கை அரசு இந்தியாவுக்கு இடமளிக்கக் கூடாது - என றார். (சி)

## கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்குப் பொருள்களை கொண்டுவர அனைத்து வர்த்தகர்களுக்கும் வாய்ப்பு

### சமூக நலத்துறை அமைச்சர் ஏற்பாடு

கொழும்பு, ஜூலை25

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சதுக சேவைகள் மற்றும்சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவரது அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பி லேயே இவ்வாறு தெரிவிக் கப்பட் டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை கப்பல் மூலம் கொண்டு செல்லும் வர்த்தகர்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் எதிர்காலத்தில் அரச கப்பல்களில் இடஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக மேற்படி வர்த்தகர்கள் தாங்கள் கொண்டு செல்லும் பொருள்களின் விவரங்களையும், கப்பலில் தங்களுக்குத் தேவையான இட அளவை யும் முன்கூட்டியே எழுத்து மூலமாக யாழ் வணிகர் கழகத்திற்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

அதே நேரம் இந்த வர்த்தகர்கள் யாழ் வணிகர் கழகத்தில் தங்களைப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருள்ளைக் கொண்டு செல்லும் வர்த்தகர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு இடையில் கடந்த 22 ஆம் திகதி மாலை மேற் கொள்ளப்பட்ட விஷேட கலந்துரை யாடலின் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இக் கலந்துரையாடல் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படக் கூடாது. மக்கள் நலனையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். நுகர்வோ ருக்கும் வர்த்தகர்களுக்கும் நியாயமான தாக அச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

குடாநாட்டில் நியாய விலையில் தாராளமாகவும் இலகுவாகவும் பொருள்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படும்.

பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவும்போது விலைகளை அதிகரிக்கும் நவடிக்கைகள் தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்,

இச் சந்திப்பின் போது யாழ். குடாநாட்டில் பொருள்கள் நியாயமான விலையில் இலகுவாகவும் தாராளமாகவும் கிடைக்கக் கூடிய வழிவகைகள் குறித்து விரிவாக ஆராயப் பட்டது-

## வடமராட்சியில் ஆசிரிய வாண்மை விருத்தி தினம்

யாழ்ப்பாணம், ஜூலை25

வடமராட்சி வலய ஆசிரிய நிலையத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஆசிரிய வாண்மைவிருத்தி தினம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகளின் பீடாதிபதி கே. கந்தசாமி கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் விசேட கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

''தற்காலக் கல்வி முறையில் ஆசிரியர் பங்களிப்பு'' என்ற தலைப்பில் பிரதம விருந்தினரின் சிறப்புப் பேருரை இடம்பெறும்.

''கல்வியில் புதிய விடயங்களை அறிமுகம் செய்தல்'' என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரியின் உபபீடாதிபதி பா. தனபாலன் உரையாற்றவுள்ளார்.

வாண்மை விருத்தியின் விசேட நிகழ்வாக ''கூடு'' கல்வியியல் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறும்.

ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் இந்த நிகழ்வுகளில் வடமராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் ஆகியோரை பங்குபற்றுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார் (203)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 11 | 26.07.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.ப.08.41 வரை |
| நட்சத்திரம் : | பரணி |
| சுபநேரம் : | 03.02 - 04.32 |
| ராகுகாலம் : | 09.02 - 10.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சகத்துறையில் பதவி வெற்றிடங்கள்

* ஒப்புநோக்குநர் (ஆங்கில அறிவு அவசியம்)
* கணனி இயக்குநர் (முன் அனுபவத்தினருக்கு முன்னுரிமை)
* புத்தகம் கட்டுநர் (முன் அனுபவம் விரும்பத்தக்கது)

இத்துறைகளில் தகைமை உடையோர்
26, 27/07/2008ஆம் திகதி (சனி, ஞாயிறு)களில்
காலை 9-4 மணிவரை நேரில் வரவும்.

**சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில்.
(76596)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 14-05-1970

மறைவு 18-07-2006

### அமரர் சின்னராசா மகேந்திரன்

திதி: 25.07.2008

கதிரவன் ஒளிமுகன் கண் விழித்தெழுந்து
எதிலுமே நெறியோடு ஏற்றமாய் உழைத்து
பதிதனில் எம்மையே புகழுற வைத்த
உதிரத்தில் உறைந்த உறவினை மறப்போமா.

காளிகோயிலடி, தாவடி வடக்கு. (76604)
என்றும் உன் நினைவில் மறவாத... குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
**துரைராசா அன்னலட்சுமி**



மலர்வு 06-11-1932

உதிர்வு 24-06-2008

மாதம் ஒன்று கழிந்தாலும்
மாறவில்லை எம் துயரம்
கூடி நீங்கள் வாழ்கையிலே
கொண்ட அன்பு குறையவில்லை
நாடு விட்டு நாடு போயும்
உம் இனத்தை மறந்ததில்லை.

24.06.2008 அன்று கனடாவில் சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு துரைராசா அன்னலட்சுமி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (25.07.2008) வெள்ளிக்கிழமை அச்சுவேலியிலுள்ள "அன்னை இல்லம்" எனும் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அன்னை இல்லம்',
இராஜ வீதி, அச்சுவேலி. (76610) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்துத்தம்பி ஜெயராசா (ஜெயபால்)



கோப்பாய் மத்தி, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஜெயராசா (ஜெயபால்) 19.07.2008 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் முத்துத்தம்பி - தையலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நவரத்தினம் - இராசாத்தி தம்பதியரின் அன்பு மருமகனும் பரலோகவதியின் அன்புக் கணவரும் ஜெனுசன், மாதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம் (கோப்பாய்), தியாகராஜா (ஜேர்மனி), இந்துமதி (ஜேர்மனி), உசாமதி (சுவிஸ்), பாலசிங்கம் (சுவிஸ்), சாந்திமதி (கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரஞ்சினி (கோப்பாய்), கமலகுமாரி (ஜேர்மனி), சோதிலிங்கம் (ஜேர்மனி), விக்னேஸ்வரன் (சுவிஸ்), மாலினி (சுவிஸ்), ரகுராமன் (லிபியா), சிவயோகவதி (பிரான்ஸ்), சிவராமலிங்கம் (லண்டன்), றஜனி (நல்லூர்), மயூரி (நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும் கிருஸ்ணராஜா (பிரான்ஸ்)வின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2008) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (76609)

தகவல்:
மு.தனபாலசிங்கம்
(சகோதரன்).

## வேலை ஆள் தேவை

கோழிப்பண்ணை ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை.
(அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை).

**ஓமக்ஸ் ஹோட்டல்**
372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(76613)

## IBMS
### Online Courses

அனைத்து Diploma கணனிக்கற்கை நெறிகளுக்குமான Online பிரிவுகள் ஆரம்பம்.

பாடசாலை மாணவர்கள்,பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள்,அரச,தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் உங்களுக்காகவே விசேட Online பிரிவுகள்.

மாணவர்கள் வசதிக்கு ஏற்ப நேரம் ஒழுங்கு செய்து தரப்படும்.

ஆரம்பம்
26/07/2008
(பகல் 10.00 மணி)

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
# 209, மானிப்பாய் வீதி,வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8232

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களிலும் ஏனைய திணைக்கள அலுவலகங்களிலும் ஓய்வூதியக் கணிப்புகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கான ஓய்வூதியப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அலுவலகங்களில் ஓய்வூதியக் கணிப்பினை மேற்கொள்ளும் அலுவலரின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். (202-207)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை25

வலி.தென்மேற்குப் பிரதேச சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபைக்குட்பட்ட 72 சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளை உரிய நேரத்தில் கலந்துகொள்ளுமாறு சபைச் செயலாளர் திருமதி.பு.சிவலிங்கம் கேட்டுள்ளார்.

அன்றையதினம் உள்ளூராட்சி வாரப் போட்டிகள், பரிசில்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் எனத் தெரிவித்துள்ளார். (202-95)

## விபத்துகளில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை25

மீசாலைப் பகுதியில்கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்துகளில் இருவர் காயமடைந்தனர்.

பலாப்பழம்வைப்பதற்கு சைக்கிளில் கட்டப்பட்டிருந்த தடி மோட்டார் சைக்கிளில் கட்டப்பட்டிருந்த விறகு தடியுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்ட சைக்கிளோட்டியான மீசாலையைச் சேர்ந்த இராசரத்தினம் (வயது 58) என்பவரும்,

வீதியின் வளைவொன்றில் சைக்கிளும் - மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர்மோதிக்கொண்டதில் மீசாலையைச் சேர்ந்த எம்.நவசோதி (வயது 25) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (202-207)

## பலப்பிட்டிய கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் சிலரைப் படகுகளுடன் காணோம்!

கொழும்பு,ஜூலை25

கொழும்பு பலப்பிட்டிய கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சிலர் கடும் புயல்காற்று காரணமாக காணாமற் போயுள்ளனர் என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பலப்பிட்டிய முகத்துவாரப் பகுதியிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஆறு படகுகளில் கடலுக்கு மீனவர்கள் சென்றனர் எனவும், அவற்றில் ஒரு படகு மாத்திரமே திரும்பி வந்துள்ளதாகவும் மற்றுமொரு படகு பாறைகளுக்கிடையில் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டதாகவும் மிகுதி நான்கு படகுகளும் மீனவரும் திரும்பி வரவில்லை என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய ஒருங்கிணைப்பாளர் ஹிராந்த சேனரட்ன குறிப்பிட்டுள்ளார். (சி)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 25.07.2008 - 04.08.2008 மு.ப. 10 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 04.08.2008 பிற்பகல் ஒரு மணி

கேள்வி திறந்து பார்க்கும் திகதி - 04.08.2008 பி.ப. 1.30 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. சுன்னாகம் தபாற்கந்தோர் திருத்த வேலை | 9000.00 | 575.00 | M8 |
| 2. சுன்னாகம் சந்தை திருத்தம் பகுதி I | 9000.00 | 575.00 | M8 |
| 3. சுன்னாகம் சந்தை திருத்தம் பகுதி II | 5000.00 | 575.00 | M8 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்திற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி *"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்"* என்ற முகவரிக்கும் அதன் பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
23.07.2008 (சி/553878)

## 47ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

மண்ணில் மழலையாய் 25-07-1961
விண்ணில் தெய்வமாய் 09-05-2008



### அமரர் சின்னத்துரை பக்தகுணசீலன் (விஜய்)
(பூங்கனிச்சோலை உரிமையாளர்)

மாசற்ற தெய்வமே எம்குல
மாணிக்கமே மணிவிழாக் காண
காத்திருந்தோம் கயவர் கண்பட்டதால்
கலைந்தது எம் கற்பனைகள்
பிறந்த நாள் வாழ்த்துக் கூற
பிஞ்சுகள் நாம் காத்திருந்தோம்
காலை எழுந்து களிவுடன் நாம் பேச
காத்திருந்தோம் - தெய்வமாய்
படமாடத்தில் நீயிருந்து சிரிக்கின்றாய்
உன் பார்வை எம்மிடம் ஏதேதோ சொல்கிறது
அன்பான அப்பாவே பிறந்தநாள் வாழ்த்துக் கூற
நீ போசாதிருக்க நாம் பெரும் பழி செய்தோமா?

பூங்கனிச்சோலை,
[illegible] வீதி, முடமாவடி.
குடும்பத்தினர்.
(சி/553882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணபுர, மஹேல, சமரவீர சதம் விளாசல் இலங்கை அணி வலுவான நிலையில்


திலான் சமரவீர

கொழும்பு, ஜூலை 24

மலிந்த வர்ணபுர, மஹேல ஜெயவர்த்தன, திலான் சமரவீர ஆகியோர் சதம் விளாசிச் சிறப்பிக்க, இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வலுவான நிலையைப் பெற்றுள்ளது. நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 422 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டத்தின் முதல் நாளில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 22 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வர்ணபுர 50 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 16 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

நேற்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. வர்ணபுர - மஹேல ஜோடி சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்தது. அபாரமாக ஆடிய வர்ணபுர டெஸ்ட் அரங்கில் இரண்டாவது சதம் அடித்து அசத்தினார். இந்த ஜோடி தம்மிடையே 155 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வர்ணபுர 115 ஓட்டங்களுடன் (14 பவுண்டரிகள்) ஹர்பஜன் சுழலில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இணைந்த மஹேல - சமரவீர ஜோடியும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன டெஸ்ட் அரங்கில் 23ஆவது சதம் அடித்துப் பிரகாசித்தார். எஸ்.எஸ்.ஸியில் அவர் அடிக்கும் 9ஆவது சதம் இதுவாகும். 259 பந்துகளை எதிர்கொண்ட அவர், 10 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 136 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இஷாந்த் சர்மாவின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 4ஆவது விக்கெட்டில் மஹேல - சமரவீரஜோடி 148 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய திலான் சமரவீர டெஸ்ட் அரங்கில் 7ஆவது சதம் கண்டார். அவருக்கு டில்சான் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிவருகின்றார்.

இந்த டெஸ்ட்டில் அறிமுகமான நடுவர்களின் தீர்ப்பை மாற்றும் விதியைப் பயன்படுத்தி டில்சான் ஆட்டமிழப்பிலிருந்து தப்பித்துக்கொண்டார். சஹீர்கானின் பந்துவீச்சை எதிர்கொண்ட டில்சான், விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் என நடுவர் அறிவித்தார். எனினும், நடுவரின் தீர்ப்பை எதிர்த்து டில்சான் மேன்முறையீடு செய்தார். மூன்றாம் நடுவர் அது ஆட்டமிழப்பு இல்லை என அறிவித்தார். இந்த விதி அறிமுகமான பின்னர் ஆட்டமிழப்பிலிருந்து தப்பித்த முதல் வீரர் என்ற பெருமையை டில்சான் பெற்றுக்கொண்டார்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 422 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. திலான் சமரவீர 111 ஓட்டங்களுடனும், டில்சான் 20 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் தொடரும்.

# சானியா ஜோடி வெற்றி

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 25

லொஸ் ஏஞ்சல்ஸ் டெனிஸ் தொடரின் இரட்டையர் காலிறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெத்தானியா மெட்டக் ஜோடி முன்னேறியது.



அமெரிக்காவின் லொஸஞ்சல்ஸ் நகரில் பெண்களுக்கான டபிள்யு.ரி.ஏ. அந்தஸ்துப் பெற்ற 'ஈஸ்ட் வெஸ்ட் பாங்க்கிளாசிக்' டெனிஸ் தொடர் நடைபெற்றுவருகிறது. நேற்று முன்தினம் நடந்த இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்ஷா, அமெரிக்காவின்பெத்தானியாமெட்டக்ஜோடி, அமெரிக்கா வின் வானியா கிங், ரஷ்யாவின் அலா கட்ரா யாவ்சேவா ஜோடியை எதிர்கொண்டது.

இந்த ஆட்டத்தில் தொடக்கத்திலிருந்தே விறுவிறுப்புடன் ஆடிய சானியா ஜோடி 6:3, 6:4 என்ற நேர் செற்களில் வானியா கிங் ஜோடியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதியில் சானியா ஜோடி, ரஷ்யாவின் எலீனா வெர்சினா, வேரா ஜூவொனரேவா ஜோடியை எதிர்கொள்ளவுள்ளது.

# ஐ.மு. கூட்டணி அரசை எதிர்த்து 10 கட்சிகள் கூட்டுப் போராட்டம்

புதுடில்லி, ஜூலை 25

நம்பிக்கை வாக்கெடுப்பில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அந்த அரசை எதிர்த்து இடதுசாரிகள் உட்பட 10 கட்சிகள் கூட்டாகப் போராட்டம் நடத்த மாயாவதி வீட்டில் நடந்த தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதன்மூலம் புதிய 3 ஆவது அணி உருவாகி உள்ளது. இந்த அணியின் தலைவர்களுக்கு உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி டில்லியில் உள்ள தனது வீட்டில் நேற்றுமுன்தினம் காலை சிற்றுண்டி விருந்து அளித்தார்.

பிரகாஷ் கரத், ஏ.பி. பரதன், டி.ராஜா, தேவ கவுடா, தேவராஜன், அபானிராய், அஜீத் சிங், சந்திரபாபு நாயுடு, சந்திரசேகர ராவ், அஜிய்சவுதாலா, பாபுலால் மராண்டி உட்பட 10 கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், அணு ஒப்பந்தம், விலைவாசி உயர்வு, பணவீக்கம், விவசாயிகள் பிரச்சினை போன்றவற்றில் மத்திய அரசை எதிர்த்து 10கட்சிகளும்சேர்ந்துகூட்டாகப்போராட்டம் நடத்துவது என்றுமுடிவு செய்யப்பட்டது

# தமிழக மீனவர் பிரச்சினை பற்றி இலங்கையுடன் பேசுக! மன்மோகன் சிங்கிடம் கருணாநிதி நேரில் கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 25

தமிழக மீனவர்கள் கச்சதீவையொட்டிய பகுதிகளில் மீன்பிடிப்பதில் உள்ள பிரச்சினைகள் பற்றி, 'சார்க்' மாநாட்டுக்கு செல்லும்போது இலங்கையுடன் பேசுமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதல்வர் கருணாநிதி கேட்டுக்கொண்டார்.

டில்லியில் முதலமைச்சர் கருணாநிதி அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு:-



கோரிக்கைகள் வைப்பதற்காக டில்லிக்கு நான் வரவில்லை. நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றமைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காகவே வந்தேன். சோனியாகாந்தி, பிரதமர் மற்றும் எங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பிரதமரிடத்தில் முக்கியமாக தமிழக மீனவர்கள் கச்சதீவையொட்டிய பகுதிகளில் மீன்பிடிப்பதில் உள்ள பிரச்சினைகளைப் பற்றிப்பேசினேன். அவர் 'சார்க்' மாநாட்டிற்குச் செல்லும்போது இதைப்பற்றி அங்கே அறிவுறுத்த வேண்டுமென்று ஏற்கனவே தி.மு.க. நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை நினைவுபடுத்தினேன். இந்தப் பிரச்சினை குறித்து இலங்கையில் பேசுவதாக உறுதியளித்தது மாத்திரமல்ல, எதிர்வரும் 31ஆம் திகதி டில்லியில் தமிழகத் தலைமைச் செயலாளர், தமிழக அரசின் மீன்வளத்துறைச் செயலாளர், மீன்வளத்துறை இயக்குநர் ஆகியோர் இந்தப் பிரச்சினை பற்றி தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு விளக்கங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

கச்சதீவைக் கொடுத்ததால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை குறிப்பாகத் தமிழக மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகங்களைப் பற்றிப்பேசினோம்.

சேதுசமுத்திரத் திட்டம் பற்றி உச்சநீதிமன்றில் வழக்கு நடந்துகொண்டிருக்கின்றபோது அங்கே வைக்கப்பட்ட வாதங்களைப் பற்றி விமர்சிப்பது வழக்குக்கு உகந்தது அல்ல. உச்சநீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று, நீதியின் அடிப்படையில் தீர்ப்பைப் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் - என்று கூறினார்.

# ராமர் பாலத்தை இடிக்காமல் சேது திட்டம் மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்று யோசனை

புதுடில்லி, ஜூலை 25

ராமர் பாலத்தை இடிக்காமல் வேறு வழியில் சேதுசமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் யோசனை தெரிவித்துள்ளது.

ராமர் பாலத்தை இடிக்காமல் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி உட்படப் பலர் மனுத் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் தொடர்பான வழக்கு, தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையில் நீதிபதிகள் முன்னிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. மத்திய அரச சார்பில் ஆஜரான சட்டத்தரணி நாரி மன் கூறியவை வருமாறு:-

கடலுக்கு அடியில் உள்ள பாலத்தை ராமர்தான் கட்டினார் என்று புராணங்களை ஆதாரமாக வைத்துக் கூறுபவர்கள், இது தொடர்பாக வேறு சில புராணங்களிலும் கூறப்பட்டிருப்பதையும் நம்ப வேண்டும். இலங்கையில் இராவணன் பிடியிலிருந்து சீதையை மீட்ட பின், அம்பு விட்டுப் பாலத்தை 3 பாகங்களாக ராமர் உடைத்தார் என்று கம்பராமாயணத்தில் கூறப்படுகிறது. பத்மபுராணமும் இதைக் கூறுகிறது.

இடிக்கப்பட்டுவிட்ட ஒன்றை யாராலும் வழிபட முடியாது. மேலும் எந்தப் பாலமும் உடைக்கப்படவில்லை. நன்கு ஆலோசிக்கப்பட்ட பின்தான் இந்தத் திட்டத்தில் ஒவ்வொரு நடவடிக்கையும் செயற்படுத்தப்படுகிறது. இதில் தவறு இருந்தால் நிச்சயம் திருத்திக்கொள்வோம். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் எந்தச் சட்ட மீறலும் இல்லை - என்றார். அப்போது நீதிபதிகள் குறுக்கிட்டு கூறியவை வருமாறு:-

ராமர் பாலம் இயற்கையாக அமைந்ததா, மனிதனால் கட்டப்பட்டதா என்பது பற்றி விவாதம் நடத்தப் போவதில்லை. அது தேவையும் இல்லை. மக்களின்நம்பிக்கைக்கு மதிப்பளித்து, இந்தப் பிரச்சினையில் சமூகமான தீர்வுகாண வேண்டும்.

இந்தத் திட்டத்தைவேறு பாதையில் நிறைவேற்றப் பல வழிகள் உள்ளபோதும் ராமர் பாலத்தை இடித்து விட்டுத்தான் நிறை வேற்ற வேண்டும் என்று அரசு ஏன் வலி யுறுத்த வேண்டும்? மக்களின் நம்பிக்கைக்கு மதிப்பளித்து, இந்தப் பிரச்சினைக்கு அறிவியல், தொழில்நுட்ப ரீதியாக, முக்கி யமாக அரசியல் ரீதியாக தீர்வுகாண வேண்டும்-என்றனர்.

# அணுசக்தி ஒப்பந்தம் விரைவில் நிறைவேறும் என்கிறது அமெ.

வாஷிங்டன், ஜூலை 24

அணுசக்தி ஒப்பந்தம் விரைவில் நிறைவேறும் என அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் டானா பெரினோ புதன்கிழமை கூறியவை வருமாறு:-

இப்போது அணுசக்தி ஒப்பந்தத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லமுடியும் என அமெரிக்கா நம்புகிறது. அமெரிக்க நாடாளுமன்றம் கூடுவதற்கு இன்னும் நிறையக் காலம் இருப்பதாகக் கூறமுடியாது. எனினும் அதற்கு முன்னதாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவிடும்.

அணுசக்தி ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவுக்குத்தான் நிறையப் பயன் கிடைக்கப்போகிறது. இந்தியாவின் எரிசக்தித் தேவையை நிறைவேற்றவும், சற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் இதன் மூலம் வழி கிடைக்கும்.

அண்மையில் ஜப்பானில் ஜி-8 நாடுகளின் கூட்டம் நடந்தபோது, அணுசக்தி ஒப்பந்தம் குறித்து ஜோர்ஜ் புஷ்ஷும் மன்மோகன் சிங்கும் ஆலோசனை நடத்தினர் - என்றார் பெரினோ.

பெரினோவின் கருத்தையே பிரதிபலித்த அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக் கவுன்சில் செய்தித் தொடர்பாளர் கார்டன் ஜான்ட்ரோ, அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச அணுசக்திக் கழகம், அணுஎரிபொருள் வழங்கும் நாடுகள் குழு ஆகியவற்றுடனும் புஷ் நிர்வாகம் பேசவேண்டியிருக்கிறது - என்றார்.

# சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்குக் கடும் தண்டனைகளை வழங்க வழி செய்யும் புதிய சட்டமூலம் இத்தாலியில் அறிமுகம்

ரோம், ஜூலை 25

குற்றவியல் தொடர்பான புதிய சட்டத்துக்கு, இத்தாலிய பிரதமர் சில்வியோ பேர்ளஸ் கோனி, நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றுள்ளார். எனினும் அரசியல் அவதானிகள், மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரின் கண்டனத்துக்கும் அதிருப்திக்கும் இப்புதிய சட்டம் உள்ளாகியுள்ளது. இச்சட்டம், குடியேற்றவாசிகளுக்கு எதிரான பாரபட்சங்களை கட்டவிழ்த்து விடும். குற்றவாளிகளாகத் தீர்க்கப்படும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்குக் கடும் தண்டனைகளை விதிக்கவும் வழி செய்கிறது என இவர்கள் சாடியுள்ளார்கள்.

குற்றச்செயல்களில் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்படும். இது இத்தாலியருக்கு அளிக்கப்படும் சிறைத் தண்டனை காலத்தை விட மும்மடங்கு மேலதிக கால நீடிப்பைக் கொண்டிருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

''இப்புதிய சட்டம், சட்டவிரோத குடியேற்றவாசிகளை நாடுகடத்துவதற்கு மாறாக, நான்காண்டு காலம் சிறையில் அடைக்க வழி செய்கிறது. சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளுக்கு வாடகைக்கு விடப்பட்ட உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கும் அனுமதி அளிக்கிறது'' - என்றும் அவர்கள் விமர்சித் துள்ளார்கள். ''புதிய சட்டம் குடியேற்றவாசிகளுக்குப் பாரபட்சமானது. இத்தாலியில் இனத் துவேஷத்தை ஊக்குவிப்பது'' - என கத்தோலிக்க தேவாலய வட்டாரமும், இத்தாலிய இடதுசாரி அணியும் குறிப் பிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மின்சாரம் பாக்கு நீரிணைக்கு அடியில் 'கேபிள்' பொருத்தப்படும்

கொழும்பு, ஜூலை 25

இந்தியாவிலிருந்து மின்சாரத்தை பெறுவதற்கு இலங்கை அரசு நேற்று முடிவுசெய்தது. இது குறித்த திட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

அதன் பிரகாரம் பாக்குநீரிணைக் கடலுக்கு அடியில் அமைக்கப்படும் கேபிள்கள் மூலம் மின்சாரம் கொண்டுவரப்படும்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான பிரேரணையை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன முன்வைத்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் பாக்குநீரிணை வழியில் இந்தக் கேபிள்கள் பொருத்தப்படும்.

இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய அமைச்சரவைத் தீர்மானங்கள் வருமாறு-

**காங்கேசன்துறை சிமெந்து ஆலையை மீண்டும் இயக்க நடவடிக்கை**

மூடப்பட்ட நிலையில் உள்ள காங்கேசன்துறையில் உள்ள லங்கா சிமெந்து நிறுவனத் தொழிற்சாலையை கூட்டு முதலீட்டு அடிப்படையில் மீண்டும் இயங்க வைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை தொழில் அபிவிருத்தி அமைச்சர் குமார் வெல்கம முன்வைத்திருந்தார்.

இத்தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் யாழ். குடாநாட்டில் உள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதோடு மக்களுக்கு நியாய விலையில் சிமெந்தை விநியோகிக்கவும் வழியேற்படுமென அரசு எதிர்பார்க்கிறது.

**கொழும்புக் கோட்டையில் பல நோக்கு மாடிக் கட்டடங்கள்**

கொழும்புக் கோட்டையில் 'ட்ரான்ஸ் வேர்க்ஸ்' சதுக்கத்தில் பலநோக்கு மாடிக் கட்டடங்களை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் முன்வைத்திருந்தனர்.

4 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு கோபுரங்களைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்த மாடிக் கடடங்களுக்கு 22 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்படப்பட்டுள்ளது.

**ஈரான் நாட்டின் உதவியில் கிராமங்களுக்கு மின் திட்டம்**

பின்தங்கிய 600 கிராமங்களுக்கு மின்சார வசதிகளை வழங்கும் நோக்கில் 8 கிராம மின்சாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை மின் சக்தி எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன முன்வைத்திருந்தார். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஈரான் இஸ்லாமியக் குடியரசு 65.8 மில்லியன் டொலர்களைவழங்கமுன்வந்துள்ளது.

## வர்த்தகர்களுடன் அமைச்சர் இன்று சந்திப்பு

கொழும்பு, ஜூலை 25

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் பொருள்களை அனுப்பும் வர்த்தகர்களுக்கும், சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், வடக்கிற்கான விசேட செயலணிக்குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் கலந்துரையாடல் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

வர்த்தகர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படும். எனத் தெரிவிக்கப்பட்டது.

# 5,000 ரூபா சம்பள உயர்வு வழங்க 7,200 கோடி ரூபா அரசுக்குத் தேவை

## அது சாத்தியமே இல்லை என்கிறார் பந்துல

கொழும்பு, ஜூலை 25

ஜே.வி.பி. தொழிற்சங்கங்கள் கூறுவது போல் தொழிலாளர்களுக்கு 5 ஆயிரம்ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக இருந்தால் 7,200 கோடி ரூபா தேவைப்படுகிறது என்றும் இவ்வாறான நிலையில் சம்பள அதிகரிப்பு சாத்தியமற்றது என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டமூலம் மீதான விவாதத்தை நேற்று சபையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டிலே தற்போது யுத்தம் ஒன்று நடைபெறுகிறது. இதற்காக அதிகளவு பணம் செலவிடப்படுகின்றது. இந்த நிலையில் தொழிலாளர்களின் சம்பளத்தை 5 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடப்படுகின்றது.

5 ஆயிரம் ரூபாவால் சம்பளத்தை அதிகரிக்க 7,200 கோடி ரூபா தேவைப்படுகிறது. யுத்தம் ஒன்று நடைபெறும் நாட்டில் இந்தச் சம்பள அதிகரிப்பு சாத்தியப்படுமா? எந்த அரசாலும் முடியாது.

யுத்தம் ஒன்று இருக்கின்ற போதிலும் நாம் பல நிவாரணங்களை மக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

நாம் ஒரு கிலோ பால்மாவிற்கு 86 ரூபா 49 சதத்தை மானியமாக வழங்கி வருகிறோம். இதன் மூலம் அரசுக்கு மாதாந்தம் [illegible] கோடியே 80 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

இருந்தும் பால்மா வகைகளின் விலைகளை இன்னும் அதிகரிக்குமாறு பால்மா கம்பனிகள் கோரிக்கை விடுக்கின்றன். நாம் ஒருபோதும் அதிகரிக்க மாட்டோம்.

நாம் பால்மா வகைகள் உட்படப் பல தரப்பட்ட பொருள்களுக்கு மானியம் வழங்கியிருக்கிறோம். இந்த மானியங்களின் ஊடாக அரசு பாரிய நட்டத்தை எதிர் கொண்டுள்ளது. - என்றார். (சி)

## கொழும்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாடுகளை விதித்து வருகின்ற னர் என்று தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடவை இந்துக்களை அங்கு செல்லவே விடாமல் தடுக்கும் தீர்மானத்தில் பாதுகாப்புத் தரப்பு உள்ளதாகத் தெரிய வருகின்றது என்றும் -

இது தவறு என்பதால், மேற்படி தடைகளை நீக்கி, இந்துக்கள் தமது பிதிர் கடன்களை நிறைவேற்றவும், கடலில் மூழ்கி நீராடி, சமயக் கிரியைகளை பூர்த்தி செய்யவும் தடையின்றி வழிசெய்து கொடுக்கும்படி பாதுகாப்புத் தரப்பினருக்கு நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்றும் -

மனுதாரர்தமது மனுவில்தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலாளர், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.பிரபாகரன், சட்டத்தரணி செல்வி ஹம்ஸா வாமதேவா ஆகியோருக்கு அனுசரணையாக சட்டத்தரணி மோகன் பாலேந்திரா இந்த மனுவைத் தாக்கல் செய்தார். (சி)

## மன்னார் மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:

இதேநேரம், இப்பகுதி ஷெல் தாக்குதலிற்கும் உள்ளாகியுள்ளதுடன் மக்கள் பயம், பதற்றம், பீதியுடன் இருப்பிடமற்றவர்களாக வனாந்தரத்ததில் வாழ்க்கை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

தற்காலிக பாதுகாப்பிற்காக தேவன்பிட்டி ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த மருதமடு மாதாவின் திருச்சுரூபம் பாதுகாப்பின் நிமித்தம் அங்கிருந்து மன்னார் ஆயர் இல்லத்திற்கு ஜூலை 22 ஆம் திகதி எடுத்து வரப்பட்டுள்ளது.

தற்காலிகமாக ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் அன்னையின் திருச்சுரூபம் மீண்டும் மடுத்திருத்தலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு வழமையான வழிபாட்டிற்காக வைக்கப்படல் வேண்டும்.

எனவே, இலங்கை மக்கள் அனைவரும் இவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட இறையாசீர் வேண்டிப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் "என்று ஆயர் கேட்டுள்ளார் ஆயர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## துணுக்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவீச்சுக்களை நடத்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

துணுக்காய் மற்றும் ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது காலையும் பிற்பகலிலும் இரண்டு தடவைகள் விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்திருக்கிறது.

இக்குண்டு வீச்சில் புலிகளுக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்தனர். பின்னர் அந்தப் படகுகள் மீது படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை இந்தத் தாக்குதல் தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் எது விதத் தகவலும் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியாகவில்லை. (சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்சத்தில் அது குறித்து ஒருவார காலத்திற்கு முன்னரே அறிவிக்க வேண்டுமென வும் இந்தியா நிபந்தனை விதித்திருக்கிறது.

இந்தியாவின் இந்த ஆலோசனையை செவிமடுக்குமாறு இலங்கை நாடாளுமன்றம் தனது உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்களின் விஜயத்தின்போது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு தமிழ்நாட்டி லுள்ள இலங்கைப் பிரதி உயர் ஸ்தானிகராலயம் தமிழ்நாட்டுப் பொலிஸாரின் உதவியைக் கோருவது குறித்து விசனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியல்வாதிகள் எங்கு விஜயம் மேற்கொள்ள விரும்பினாலும் இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் புதுடில்லி ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வவுனிக் குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டனர் என்றும் குளம் அமைந்துள்ள பகுதியுடன் 10 சதுரகிலோ மீற்றர் பரப்பளவான பகுதியை அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த னர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் புலிகள் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவித்த இராணுவப் பேச்சாளர், 7 புலிகளின் சடலங்களையும் 120 மி.மீ. ஏவுக்கணை செலுத்தி ஒன்று உட்பட சில ஆயுதங்களையும் தாங்கள் கைப்பற்றியிருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை - வவுனிக்குளம் கைப்பற்றப்பட்டதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பில் புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் நேற்று இரவு கிடைக்கவில்லை. (சி)

## அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப்படையினர் மோட்டார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்டசேத விவரம் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. தமது தரப்பில் எந்த இழப்பும் ஏற்படவில்லை என்று விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சார்க் மாநாட்டின் பாதுகாப்புக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சார்க்' மாநாட்டை முன்னிட்டு கொழும்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பில் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் நுழையும் பொதுமக்கள் முழுமையானசோதனைக்குள்ளாக்கப்படுவர். அந்தப் பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் தமது நிறுவனத்தால் வழங்கப்படும் விசேட அடை யாள அட்டைகளைக் கொண்டிருத்தல் அவசியம்.

கட்டுநாயக்கா விமான நிலையப்பகுதி, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபப்பகுதி மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களும் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்குகின்றன். அத்துடன் 'ஹில்டன்' ஐந்து நட்சத்திர விடுதிக்கு முன்னால் உள்ள சுற்று வட்டத்தில் இருந்து ஜோர்ஜ் வீதி, பழைய நாடாளுமன்றம், மனரன் வீதி, துறைமுகம் வரையிலான பிரதேசம், கடற்படைத்தளம் மற்றும் பொலிஸ் தலைமையகம் என்பன அதியுயர் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

கொள்ளுப்பிட்டிச் சந்தியிலிருந்து காலி வீதியின் பழைய நாடாளுமன்றம் வரையிலான காலிமுக வீதி, கொம்பனித்தெரு ரயில் நிலைய வாயிலிலிருந்து இராணுவத் தலைமையகம் வரையிலான பிரதேசங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சை அண்மித்த பகுதிகளும் அதியுயர் பாதுகாப்பு பிரதேசங்களில் அடங்குகின்றன.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் வரை புகையிரதத்தில் வரும் பயணிகள் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை கடந்து செல்வதற்காகப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடும்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் ஈடுபடும் ரயில் சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய சேவைகள் வழமைபோல் இயங்கும் - என்றார் அவர்.

இதேவேளை, 'சார்க்' மாநாட்டின் பாதுகாப்புப் பணிகளில் 40 மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன என்றும், சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ள இந்த நாய்கள் சார்க் தலைவர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் மாநாடு நடைபெறும் பிரதேசங்களின் பாதுகாப்புக்கும் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

INORGANIC CHEMISTRY
அசேதன சேர்வைகளை வேறு படுத்தும் முறைகள்
அதிரடி விற்பனையில்
By S.Vasu
★ இரசாயனவியலின் கட்டுரை (Part-c) பகுதிக்குரியது.
★ எளிமையான பல உதாரணங்களுடன்.
★ பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் உடனடி தேவைக்கானது.
★ கிடைக்கும் இடம் நாவலர் ஆனைப்பந்தி.

Colour Separation
அச்சு வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இங்கே
Positive Negative
குறுகிய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்
'Packiyapathy'
St.Xavier's Lane, Mallakam.

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
வெற்றித் தேர்வு.திருமலை.எஸ்.கணேசலிங்கம்
தரம்:5வெற்றித்தேர்வு-19,20,21,22
தரம்:4.வெற்றித்தேர்வு.1,2,3,4,5,6,7
மாவட்ட பரீட்சை வழமை போல்.
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
ஞாயிறு சயன்ஸ் அக்கடமி நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக.
2007 மேலதிக விபரங்களுக்கு. 021 222 9016

கருத்தரங்கு
வணிகக்கல்வி S.யசோ காலம் 26.07.2008 சனி 8.30 am
அளவையியல் P.கமல் காலம் 27.07.2008 ஞாயிறு 8.30 am
யூனிவேர்சல் (யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
வெளிமாணவரும் பங்கு பற்றலாம்
எதிர்பார்க்கை வினாக்கள், பாடக்குறிப்புகள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org